# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 தை 11 புதன்கிழமை (24-01-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:58


# யுத்த நிறுத்தத்தைப் புலிகள் மேலும் ஒருமாதம் நீடித்தனர்!

## அரசின் மீது அழுத்தம் கொடுக்கும்படி சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள்

லண்டன்,ஜனவரி24

**தாங்கள் ஒருதலைப்பட்சமாக அறிவித்த யுத்தநிறுத்தத்தை மேலும் ஒரு மாத காலம் நீடிப்பதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்தனர்.**

**இந்த அறிவிப்புக்குச் சாதகமாகப் பதில் நடவடிக்கை மேற்கொண்டு, சமாதானத்துக்கான இணக்க சூழல் மற்றும் சகஜ நிலையில் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இணங்கும்படி ஸ்ரீலங்கா மீது அழுத்தம் கொடுக்குமாறு சர்வதேச சமூகத்தையும் புலிகள் கோரியுள்ளனர்.**

இது தொடர்பாக வன்னியிலுள்ள தமது தலைமையகத்தில் இருந்து புலிகள் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தனர்.

பெருநாள் காலத்தை முன்னிட்டு கடந்த டிசெம்பர் 24 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதாகப் புலிகள் அறிவித்திருந்த ஒருமாத கால - ஒருதலைப்பட்ச - யுத்தநிறுத்தம் இன்று நள்ளிரவு 12 மணியுடன் முடிவடைய இருந்த சமயம் அந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் யுத்தநிறுத்த நீடிப்பை வரவேற்கின்றார் சொல்ஹெய்ம்

லண்டன்.ஜன.24

விடுதலைப்புலிகள் ஒருதலைப் பட்சமான யுத்தநிறுத்தத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடித்துள்ளதை நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் வரவேற்றுள்ளார்.

லண்டன் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு நேற்றிரவு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்துக்குப் பதிலாக இலங்கை அரசாங்கமும் யுத்த நிறுத்தம் அறிவிக்குமா? என்பது குறித்து இப்போது கருத்து எதுவும் கூறமுடியாது. எனினும் இந்த விடயத்தில் சிரமங்கள் உள்ளன என்ப

(12ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்த நீடிப்புப் பற்றி அரசுக்குத் தகவல் தெரிவிப்பு

லண்டன்.ஜன.24

யுத்தநிறுத்தத்தை நீடிப்பது பற்றிய தமது முடிவை, ஸ்ரீலங்கா அரசுக்குத் தெரியப்படுத்துமாறு நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மை விடுதலைப் புலிகள் உத்தியோகபூர்வமாகக் கேட்டுள்ளனர்.

பேச்சுக்களில் பங்குபற்றும் தமது சிரேஷ்ட பிரமுகர் அன்ரன் பாலசிங்கம் மூலம் தமது யுத்தநிறுத்த நீடிப்பு முடிவை எரிக் சொல்ஹெய்முக்குத் தாங்கள் தெரியப்படுத்தியிருப்பதாகவும்

அந்த முடிவை ஸ்ரீலங்கா அரசுக்குத் தெரியப்படுத்துமாறு அவரைத் தாங்கள் உத்தியோகபூர்வமாகக் கோரியிருப்பதாகவும் -

யுத்தநிறுத்த நீடிப்புத் தொடர்பாக நேற்று வெளியிட்ட தமது அறிக்கையில் புலிகள் தெரிவித்துள்ளனர்.

## அவசரப் பயணத் தேவைகளுக்கு விமான சேவையில் முன்னுரிமை

யாழ்ப்பாணம்,ஜன.24

பலாலி - இரத்மலானை விமான சேவையில் அவசர தேவைகளுக்காகப் பயணம் செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி வரை பயணம் செய்வதற்காகப் பதிவுகளை மேற்கொண்டவர்களில் -

மரண நிகழ்வுகளுக்குச் செல்பவர்கள், அரச ஊழியர்கள், மதத்தலைவர்கள், நேர்முகப் பரீட்சைக்குச் செல்ப

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்குப் பொருள்களை ஏற்றும் பணி திடீரென நிறுத்தம்

கொழும்பு,ஜன.24

கொழும்புத் துறைமுகத்தில் வடக்குக்கான அத்தியாவசியப் பொருள்களை கப்பலில் ஏற்றும் பணி நேற்றுப் பிற்பகல் திடீரென நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

'குமண', 'கிரிந்த' ஆகிய கப்பல்களில் வடக்குக்கான அத்தியாவசியப் பொருள்கள் ஏற்றும் பணி கடந்த சில தினங்களாக இடம்பெற்றுவந்தது.

நேற்றுப் பிற்பகலில் கிடைத்த உயர்மட்ட உத்தரவு ஒன்றை அடுத்து அந்தப் பணி திடீரென நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பணி மீண்டும் எப்போது ஆரம்பிக்கப்படும் என்ற விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

(உ-3)

## கதிர்காமர் ரஷ்யாவில்

கொழும்பு,ஜன.24

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உத்தியோகபூர்வமான விஜயம் ஒன்றை மேற்கொண்டு ரஷ்யாவிற்கு சென்றுள்ளார்.

இலங்கைப் படையினருக்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் இருதரப்பு உறவுகள் தொடர்பாக அவர் அங்கு பேச்சுக்களை நடத்துவார். (உ-3)

## ஜனாதிபதியை பதவி விலகக் கோரிக்கை

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம்,வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகியவற்றுக்குத் தீர்வு காண்பதற்குத் தகுதியானவராக ஜனாதிபதி இல்லாததால் அவர் பதவி விலக வேண்டும் என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் கருணாசேன கொடித்துவக்கு கோரியுள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

## மிருசுவிலில் ஒருவர் காயம்

நெல்லியடி,ஜன.24

மிருசுவிலில் தவசிகுளம் பகுதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் வீழ்ந்து வெடித்த ஷெல்லுக்கு அந்தப் பகுதிக்கு தென்னைமட்டை பொறுக்கச் சென்றிருந்த ஒருவர் காயமடைந்தார்.

பளையிலிருந்து இடம்பெயர்ந்து அல்வாய் கிழக்கில் வசித்துவரும் வேலுப்பிள்ளை விநாயகம் (வயது 48) என்பவரே காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.(உ-109)

## ஹெலியிலிருந்து தவறுதலாக 50 கலிபர் வேட்டு

கொழும்பு,ஜன.24

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எம்.ஐ-24 ரக ஹெலியில் பொருத்தப்பட்டிருந்த 50 கலிபர் துப்பாக்கி நேற்று தவறுதலாக வெடித்தது.

இதனால் விமான நிலையத்துக்குச் சமீபமாகவுள்ள அமந்திலுவில கிராமத்தில் சில தென்னைமரங்கள் முறிந்து வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## மன்னாரில் இரு இளைஞர் சுட்டுக்கொலை

வவுனியா,ஜன.24

மன்னார் - உயிலங்குளம் இராணுவ முன்னணிக் காவலரண் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு சீருடையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இரண்டு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் நேற்று மாலை சீருடையினரால் மன்னார் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

உயிரிழந்தவர்கள் இருவரும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் நேற்றுமுன்தினம் இரவு படையினர் மீட்ட பகுதிகளில் நேற்று உக்கிரச் சண்டை

கொழும்பு,ஜன.24

தென்மராட்சியில் நேற்றுமுன்தினம் இரவு படையினர் மேற்கொண்ட 'கினிகிர 9' இரண்டாம் கட்ட இராணுவ நடவடிக்கையின் போது மீட்கப்பட்ட பிரதேசத்தில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும சண்டை இடம்பெற்றதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

புதிதாகக் கைப்பற்றிய பிரதேசத்தில் பலமான நிலையில் படையினர் உள்ளதால் விடுதலைப் புலிகள் அந்தப் பகுதிகளில் இருந்து இழப்புக்களுடன் வெளியேறியுள்ளனர் என்றும் தகவல் நிலையம் தெரிவித்தது.

நேற்று இடம்பெற்ற சண்டையில் இரு படையினர் உயிரிழந்தனர் என்றும், ஆறு படையினர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் தரப்பில் 25 பேர் உயிரிழந்ததாகத் தெரியவந்தது என்றும் தகவல் நிலையம் கூறியது.

கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் குடாநாட்டில் இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஆயிரத்து 220 பேர் உயிரிழந்ததாகவும் -

ஆயிரத்து 250 பேர் காயமடைந்ததாகவும் - தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (உ-3)

## தமிழ் மக்கள் குறித்துப் பேச தகுதியற்றவர் கதிர்காமர்!

### நாடாளுமன்றில் மகேஸ்வரன் ஆவேசம்

கொழும்பு,ஜன.24

"தமிழ் மக்களினால் தெரிவு செய்யப்படாது நியமன எம்.பியாக வந்துள்ள அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தமிழ் மக்கள் குறித்துப் பேச தகுதியற்றவர். அத்துடன் தமிழ் மக்கள் பற்றிப் பேச அவருக்கு அருகதையும் இல்லை" - என்று ஐ.தே.க.வின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்.நூலகத்தை புனரமைப்பதாக செங்கல்லும், புத்தகமும் தேவை எனக் கூறி பிரசாரம் செய்த கதிர்காமர் அதற்காகப் பல லட்சம் ரூபாவை சேகரித்தார்.

அந்தப் பணத்தைக் கொண்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்று சர்வமதப் பிரார்த்தனை

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை அனுசரித்து அரசாங்கமும் யுத்தநிறுத்தம் செய்ய வேண்டுமெனக் கோரி மட்டக்களப்பு தாண்டவன்வெளி தேவாலய மைதானத்தில் நேற்று சர்வமதப் பிரார்த்தனை ஒன்று நடத்தப்பட்டது.

மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பின் தேசிய அமைப்பாளர் வண.மாதம்பாகம அஜித் நாயக்க தேரர், பல்லேகம ரத்னசிறி தேரர் மற்றும் கிருஷ்ணா நிலையத் தலைவர் சுவாமி கடம்பகணநாதன், வணபிதா ஜோசப் மேரி அடிகளார் ஆகியோர் ஆசியுரை வழங்கி சர்வமதப் பிரார்த்தனை நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

யுத்தநிறுத்தம் செய்யுமாறு கோரிப் பேரணிகள், உண்ணாவிரதங்கள் நடத்துபவர்கள் அரசாங்கத்துக்கு எதிராகக் குற்றம் இழைத்தவர்களாகக் கருதப்படுவார்கள் எனப் படையினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்திருந்தும் இந்தச் சர்வமதப் பிரார்த்தனை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-7-21)

## வாழைச்சேனையில் நேற்றுப் பேரணி!

சுயநிர்ணய உரிமையே தமிழ் மக்களின் அபிலாசை என்று கோரி மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வாழைச்சேனையில் நேற்றுப் பேரணி ஒன்று இடம்பெற்றது.

நூற்றுக்கணக்கான பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் பங்குபற்றிய இந்தப் பேரணியில் சுலோக அட்டைகளையும், பதாகைகளையும் அவர்கள் தாங்கிச் சென்றனர்.

சுயநிர்ணய உரிமையே தமிழ் மக்களின் அபிலாசை என்பதை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தவும் -

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி இலங்கை அரசை சர்வதேச சமூகம் வற்புறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தும் -

இந்தப் பேரணி நடத்தப்பட்டதாக அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (உ-3)

# இறுதிப் பரீட்சைகள்

12MS, 6DCP, 2DITஆகிய பிரிவுகளுக்கான பரீட்சைகள் யாவும் யாழ்.இந்துக் கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பரீட்சை மண்டபங்களில் அறிவிக்கப்பட்ட நேர அட்டவணையின் பிரகாரம் 27.01.2001 தொடக்கம் நடைபெறும்.

குறிப்பு:- 2DIT பிரிவில் பயின்ற மாணவர்களில் DATA COMMUNICATION AND NETWORK பரீட்சை எடுக்கத் தவறிய மாணவர்கள் 02.02.2001 க்கு முன்பாக தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கான பிரிவு 1ற்குரிய வகுப்புகள் அனைத்தும் ஆரம்பமாகி விட்டன. புதிய மாணவர்களும் இப் பிரிவில் இணைந்து கொள்ளலாம். மேலதிக விவரங்கள் அலுவலகத்தில்......

"IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"

100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C/14950) இயக்குநர் IIS


# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1961 - 08 - 28

மறைவு 1998 - 01 - 28

## அமரர் தருமலிங்கம் சத்தியசீலன்

(முகாமையாளர், வலி.கிழ. தெ.ப. ப.நோ.கூ சங்கம்)

அன்புக்கு இலக்கணமாய் பாசத்தின் உறைவிடமாய்
நல்வழிகாட்டிய எம் அன்புத் தந்தையே
ஆண்டுகள் மூன்று என்ன, முந்நூறுதான் ஆனாலும்
நீங்காது உங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டு.

கோப்பாய் மத்தி, கோப்பாய். (83286) மனைவி, பிள்ளைகள்

## பருத்தித்துறை கோட்டு வாசல் அருள்மிகு ஸ்ரீ சண்முகா பரமேஸ்வரி தேவஸ்தானம்

### அபிராமிப்பட்டர் விழா

இன்று (24-01-2001) புதன்கிழமை பகல் 12.00 - மாலை 5 மணி வரை

அபிராமிப்பட்டர் விழா அதி விமரிசையாக நடைபெறும்.
பகல் 12.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனை
பகல் 1.00 மணிக்கு அன்னையிடம் சரணாகதி
வழங்குபவர்: அருட்பிரபாகரசீலன்
சிவாகமோபதேச வாசஸ்பதி சைவசித்தாந்த பண்டிதர்
**சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தக்குருக்கள் B.A**
(ஆசிரியர், யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

பிற்பகல் 2.00 மணிக்கு அபிராமிப்பட்டர் அருளிய அபிராமி அந்தாதி தெய்வீக இசை ஆராதனை.
வழங்குபவர்கள்
சங்கீத பூசணம் திரு. S.பத்மலிங்கம் - பாட்டு
இசைஞான திலகம்,
திரு. U.R.இராதாகிருஸ்ணன் - வயலின்
மங்கள இசை: பருத்தித்துறை
S.விஜயகுமார், S.சதீஸ்குமார்
சகோதரர்கள்

மாலை 4.00 மணிக்கு அம்பாள் வசந்த மண்டபத்தில் கொலு வீற்றிருக்க விசேட பூசைகளும் ஆராதனைகளும் நடைபெற்று எம்பெருமாட்டி விசேட மங்கள வாத்தியம் முழங்க வீதிவலம் வந்தருள்வாள்.

அடியார்கள் அனைவரையும் அம்பிகையின் அருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அனைவரும் வருக! அபிராமி அம்பிகையின் அருளைப்பெறுக!!

ஒலி, ஒளி அமைப்பு:- வாணி சவுண்ட் சேர்விஸ் பருத்தித்துறை. (C/14947)

விழா உபயகாரர் ராகுல சூரியன்ஸ், பருத்தித்துறை.


கணக்கீடு
முகுந்தன்
B.B.A. (Hons) F.M(Spl)
2001 A/L
கிரயக் கணக்கீடு
ஆரம்பம்:-25.01.2001
BARATHY
சித்தன்கேணி. (83295)

லஷ்சுமி இணுவில்
இரண்டாவது வாரமாக
விஜயகாந்த் (இருவேடம்), மீனா, செந்தில் நடித்த
வானத்தைப் போல
(நீலம்)
காட்சிகள் 10.30, 2.30 (ப.நே.) (83309)

நாகம்மாஸ்
சுன்னாகம்
டைட்டானிக்
(தமிழ் - நீலம்)
இது ஓர் உண்மைச் சம்பவம்.
காட்சிகள்:10.30, 2.30 (புதிய நேரம்)
26.01.2001 முதல்
பெண்ணின் மனதைத் தொட்டு (83296)

ராஜா
யாழ்ப்பாணம்
பிரசாந்த், சிம்ரன், லைலா, ரகுவரன், வையாபுரி
மற்றும் பலரின் நடிப்பில்
பார்த்தேன் ரசித்தேன்
காட்சிகள்: 10.30, 2.00 (மு.நே.) (C/14951)


## யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழகம்

### கருத்தரங்கு - 2000

"தமிழர் வாழ்வில் சடங்கிலிருந்து நாடகம் வரை"

எனும் கருப்பொருளைக் கொண்ட கருத்தரங்கு ஒன்று சித்திரை மாத நடுப்பகுதியில் எமது கழகத்தினால் நடத்தப்படவுள்ளது. அவ்வரங்கிலே படிப்பதற்காக க.பொ.த. உயர்தர, பல்கலைக்கழக, நாடக அரங்கியல் கற்கைநெறி மாணவர்களுக்கு பயனுள்ளனவாக அமையும் கட்டுரைகளை துறைசார்ந்தோரிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். இக்கருத்தரங்கில் கட்டுரை படிக்க விரும்புவோர் 15.02.2001 இன் முன்னர் பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பொ.அருந்தவநாதன் செயலாளர்

பேராசிரியர் அ.சண்முகதாஸ்
தலைவர்
உயர்பட்ட ஆய்வுபீட பணியகம்,
குமாரசாமி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (83288)

க.பொ.த. உயர்தர விஞ்ஞான மாணவர்களிற்கு!

## சுடர் ஒளி ஆதரவுடன்

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
தாய விஞ்ஞானப் பிரிவினர்
யாழ்.றோட்டறிக் கழகத்துடன் இணைந்து நடத்தும்
பாடசாலை மாணவர்களுக்கான

### மாணவ ஆய்வாளர் விருது

மேற்படி விருது தொடர்பான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

இடம் : யா/இந்து மகளிர் கல்லூரி
காலம் : 27.01.2001 சனி காலை 10.30 மணி

குறிப்பு:- விண்ணப்பிக்காத போட்டியில் பங்குபெற விரும்புகின்ற மாணவர்களும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளலாம்.

செயலாளர்,
யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கம்,
தாய விஞ்ஞானப் பிரிவு. (C/14948)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## பெரியதம்பி தவராசா

மண்ணில்:- 1960.10.05
விண்ணில்:- 1996.10.05

# ஆறாம் மாத நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
## பெரியதம்பி இராசதுரை

மண்ணில்:- 1962.04.30
விண்ணில்:- 2000.08.28

அவனியில் பூத்த மலர்களே! அன்பின் அண்ணன்மார்களே!
ஆறாத்துயரில் எந்தனைவிட்டுச் சென்றதும் எங்கு?
தீராத துன்பங்கள் தினம் வந்து தடம் பதிக்க
கண்ணீரில் கரைந்தென்றும் காணாமற் போகின்றேன்
ஆனாலும் உம் நினைவில் அனுதினமும் வாழுகின்றேன்
பார்விட்டுச் சென்ற உங்கள் பாசமுகம் அதைக் காண
நீர் விட்டு நிதமிங்கு நானிருப்பேன் உம் நினைவோடு..."

இன்று (24.01.2001) புதன்கிழமை தற்போதைய எமது இல்லத்தில் பகல் 12.00 மணிக்கு நடைபெறும் சபிண்டீகரண வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
அப்பா, அம்மா, சகோதரர்கள்.

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

நிரந்தர முகவரி:- தவசிகுளம், மிருசுவில்.

தற்போதைய முகவரி:- ஆலடி ஒழுங்கை, பொலிகண்டி. (83272)

தகவல்:
பெரியதம்பி நவரட்ணம் (ராசன்)

# உதயன்

## உச்ச மோசடி!

நாட்டின் பொருளாதார நிலை மிக மோசமாகி, கீழ் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. நாணயத்தின் பெறுமதி அடிக்கடி குறைக்கப்படுகிறது.

இந்த மாதத்தில் மீண்டும் நாணயத்தின்பெறுமதி குறைக்கப்பட்டுள்ளது. அதனால் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உட்பட, மக்களின் நாளாந்தத் தேவைகளுக்கு உரிய பாவனைப் பொருள்களின் விலைகள் கிடுகிடுவென உயர்ந்துள்ளன. கட்டணங்களும் அதிகரித்துள்ளன.

அது போதாதென்று, பல வகையான சேவைக் கட்டணங்களையும் உயர்த்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது மின்சாரக் கட்டணம், தொலைபேசிக் கட்டணம், குழாய் நீர்க் கட்டணம், பஸ் கட்டணம், மருந்துப் பொருள்கள் மற்றும் வைத்திய சேவை உபகரணங்களுக்கான விலைகள் என்று பலவும் வேகமாக உயர்ந்து கொண்டிருக்கின்றன.

மக்களின் வாழ்க்கைச் செலவுப் பாரம் அவர்கள் கீழே விழுந்து நசுங்கும் அளவுக்குக் கனத்தும் பெருத்தும் வருகிறது. விலை உயர்வுகளும் கட்டணச் சுமைகளும் அவர்களின் நாளாந்த வாழ்வின் முதுகெலும்பை ஒடித்து உடைக்கின்றன.

வெளிநாடுகள் கோடிக்கணக்கான ரூபா பணத்தை நிதி உதவியாக வழங்குவதாகப் பிரமாதப் படுத்தும் அரசு, மக்கள் மீது அவர்கள் நிமிர முடியாத அளவுக்கு வரி உயர்வுகள், விலை உயர்வுகள், கட்டண உயர்வுகள் ஆகிய பலவகைப் பாரங்களை ஏற்றுவது ஏன் என்று பொருளாதார ஆய்வாளர்கள் கேட்கிறார்கள்.

திறந்த பொருளாதாரம் என்ற பெயரில், உலக வங்கியின் ஆலோசனையின் பிரகாரம் அத்தியாவசிய சேவைகள் கூடத் தனியார் மயமாக்கலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன மேலைநாடுகளைப் பின்பற்றி சுகாதாரசேவையையும்தனியார் மயமாக்க அரசு ஆலோசித்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

இத்தகைய நடவடிக்கைகள், ஏற்கனவே ஏழைகளாக உள்ளவர்களை நாடளாவிய ரீதியில் பட்டினி நிலைக்குத் தள்ளுவதுடன், மத்திய தர வகுப்பினரைக் கடனாளிகளாக்கி, சேமிப்பை நினைத்துப் பார்க்கவும் முடியாதவர்கள் என்றாக்கப் போகிறது!

இந்த நிலைமைக்கு உண்மையான காரணம் போர்ச் செலவு என்பது, தமிழ்ப் பகுதிகளில் வாழும் முதலாம் ஆண்டு மாணவனுக்கும் தெரியும்; புரியும். ஆனால் ஜனாதிபதியும், அவரது அமைச்சர்களும், நாடாளுமன்றஉறுப்பினர்களும் அதனை மூடி மறைத்துப் பேசி வருகிறார்கள்.

எமது பதவிக் காலத்தில் அரச ஊழியர்களுக்கு எத்தனையோ சம்பள உயர்வுகளை வழங்கி விட்டோம். போரை நடத்திக்கொண்டே இதனைச் செய்தோம். போர் ஒரு பக்கத்தில் நடைபெற்றாலும் அபிவிருத்தி அடுத்த புறத்தில் இடம்பெறுகிறது — என்பது ஜனாதிபதியின் நிலைப்பாடு.

போரை நிறுத்தினால் மக்கள் மீது ஏற்றப்படும் சுமைகளை இலகுவாகக் குறைக்கலாம். ஆனால் ஆட்சித் தலைவர்கள் தமது சொந்த விருப்பத்துக்கும் சிந்தனைக்கும் ஏற்ப, அரசியல் இலாபம் கருதிப் போரைத் தொடருகிறார்கள். போரை நிறுத்தக் கிடைத்த நல்ல தருணத்தையும் நழுவவிட்டு, இறுமாப்பாகப் பேசுவதில் நாள்களை நகர்த்திக்கொண்டிருக்கிறார்கள். அரசியல் மோசடியின் உச்ச நிலை இது எனலாம்!

# சூடானில் வரட்சி காரணமாக
# 1 கோடி மக்கள் மடியும் அபாயம்!

## அவசர நிதி உதவி கோருகிறது ஐ. நா.

கொன்டுன், ஜன. 24
சூடானில் வரட்சி மற்றும் பஞ்சத்தால் 1 கோடி மக்கள் மோசமாகப் பாதிப்படையும் நிலை தோன்றியுள்ளதால் இதனைத் தடுப்பதற்கு உலக நாடுகள் நிதி வழங்குமாறு ஐ. நா. விடுத்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், சூடானில் தொடர்ச்சியாக நிலவும் வரட்சியால் கடுமையான உணவுப்பஞ்சம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் நீர் நிலை அனைத்தும் வற்றி விட்டன. மக்கள் உணவுக்காகவும், குடிதண்ணீருக்காகவும் அலைந்து திரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

அடுத்த 3 மாத காலத்துக்குள் தேவையான நிவாரண உதவிகள் சூடானுக்குக்கிடைக்காது விட்டால் சுமார் ஒரு கோடி மக்கள் உணவுப் பஞ்சத்தால் இறக்க நேரிடும்.

கடந்த வருடம் நவம்பரில் சூடானில் நிவாரணத்துக்காக 1 கோடி 94 லட்சம் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளது.

ஆனால் இந்தத் தொகை போதாது உள்ளது. சூடானில் எஞ்சியிருந்த ஒரு சில கிணறுகளும் வற்றிவிட்டன.

இந்த நிலையில் சூடான் மக்களைக் காப்பாற்ற அவசர நிதி உதவி தேவைப்படுகிறது.

உணவுக்காக 4 கோடிடொலர்களும், குடிதண்ணீர் மற்றும் சுகாதார சேவைக்கு 70 லட்சம் டொலர்களும் உடனடியாகத் தேவைப்படுகின்றன.

3 மாதங்களுக்குள் இந்த உதவிகள் சூடானுக்கு கிட்டாவிட்டால் மோசமான பாதிப்புகள் உருவாகும்.

இவ்வாறு ஐ. நா. தெரிவித்துள்ளது.

பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் உள்நாட்டுப்போரினால் சீர்குலைந்த சூடானை வரட்சியும் கடுமையாகத் தாக்கியதால் மக்கள் மோசமாகப் பாதிப்படைந்துள்ளனர்.

1998 ஆம் ஆண்டில் சூடானின் தென் பகுதியில் பல ஆயிரக்கணக்கான மக்கள் பஞ்சத்தால் மடிந்தது குறிப்பிடத்தக்கது.

(ஒ-10)

# மகா கும்பமேளா விழாவில் சோனியா கலந்துகொண்டார்

## இந்துக்களைக் கவரும் முயற்சியாம்



கும்பநகர், ஜன. 24
பல லட்சம் இந்துக்கள் கலந்து கொள்ளும் மகா கும்பமேளா விழாவில் இந்திய காங்கிரஸ் கட்சித்தலைவர் சோனியா கலந்துகொண்டார்.

உள்துறை அமைச்சு பாதுகாப்புக் குறித்து விடுத்த எச்சரிக்கையைப் புறக்கணித்த சோனியா, அலகாபாத்தின் புஞ்ச் நகருக்கு நேற்று முன்தினம் சென்றார்.

அங்கு அவரது கணவர் மறைந்த ராஜீவ் காந்தியின் மூதாதையரின் இல்லமான சுராஜ்பவனில் தங்கினார்.

பின்னர் யமுனை ஆற்றில் படகு ஒன்றின் மூலம் திரிவேணி சங்கமத்தை அடைந்த சோனியா அங்கு இந்துமத வழிபாடுகள் மற்றும் சமயச் சடங்குகளில் பங்கு பற்றினார்.

வாரணி சங்கராச்சாரியாரையும், அயோத்தி பீடத்தின் பரமாச்சாரியாரையும் சோனியா சென்று பார்த்தார்.

சோனியாவின் இந்த நடவடிக்கைகள் பிறப்பால் இந்து அல்லாதவர் என்ற பெயரை அகற்ற எடுக்கப்படும் முயற்சிகளே என்று ஆளும் பாரதிய ஜனதாவின் மூத்த தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

இத்தாலியரான சோனியாவை இந்தியர்கள் அந்நியராகவே பார்ப்பதாகவும் இந்துக்களின் வாக்குகளைப் பெறவே இந்து விழாக்களில் அவர் கலந்துகொள்வதாகவும், பெயர் வெளியிட விரும்பாத பா. ஜ. க. பிரமுகர் கூறியுள்ளார்.

(ஒ-10)

# முன்னர் பார்த்திராத
# பலஸ்தீனக் காதலியிடம் சென்ற இஸ்ரேலிய காதலன்படுகொலை

ஜெருசலேம், ஜன. 24
தனது பலஸ்தீனக் காதலியை முதன் முறையாக நேரில் காணச் சென்ற இஸ்ரேலிய இளைஞரின் உயிரற்ற உடலே மீட்கப்பட்டது.

இந்தச் சோகச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது: 16 வயதான இஸ்ரேலிய இளைஞனும் பலஸ்தீன யுவதியும் 'இன்ரர்நெற்' உரையாடல் மூலம் அறிமுகமாகினர்.

பாடசாலை செல்லும் இவர்கள் இருவரிடையேயான உரையாடல்கள் நாளடைவில் காதலை ஏற்படுத்தின.

ஒருவரை ஒருவர் நேரில் சந்திக்க முடியாத போதும், பரம எதிரிகளான இரு வேறு இனங்களைச் சேர்ந்தவர்கள் என்பதை அவர்கள் உணர்ந்த போதும் இருவரிடையேயும் காதல் வளர்ந்தது.

இதேசமயம் மேற்குக் கரைப் பகுதியில் இஸ்ரேலியப் படைகளுக்கும், பலஸ்தீனர்களுக்கும் இடையே மோதல்கள் தொடங்கித் தொடர்ந்தன.

இந்த நிலையில் தனது காதலியை நேரில் சந்திக்கத் துடித்த இஸ்ரேலிய இளைஞன், பலஸ்தீனப் பகுதிக்குள் நுழைய முயற்சித்தான்.

அவனது ஆவலைப் புரிந்து கொண்ட கும்பல் ஒன்று பெரும் தொகைப்பணம் கொடுத்தால், காதலியைக் காண உதவுவதாகக் கூறியது.

இஸ்ரேலிய இளைஞன் தனது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களிடம் சிறிது சிறிதாக சேர்த்த கணிசமான பணத்துடன் அந்தக் கும்பல் இஸ்ரேலியக் குடியிருப்பில் இருந்து கூட்டிச் சென்றது.

அதன் பின்னர் அந்த இளைஞனின் உடல் பலஸ்தீன நகரான ரமலாவில் துப்பாக்கிச் சூடுகளால் துளைக்கப்பட்ட சடலமாக மீக்கப்பட்டுள்ளது. அவன் எடுத்துச் சென்ற பணமும் திருடப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத் தரப்புகள் இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளன.

(ஒ-10)

# சோனியாவின் உறவினரின் மனு நிராகரிப்பு

கோலாலம்பூர், ஜன. 24
'போபர்ஸ்' பீரங்கிபேர ஊழல் தொடர்பான விசாரணைகளுக்காத் தன்னை இந்தியாவுக்கு அனுப்புவதை எதிர்த்து சோனியாவின் உறவினரும், ஆயுதத் தரகருமான அட்டோனியோகுவாட்ரோச்சி தாக்கல் செய்த மனுவை மலேசிய நீதிமன்றம் நிராகரித்தது.

இந்தியாவின் வேண்டுகோளின்படி மலேசியப்பொலீஸார் குவாட்ரோச்சியைக் கைது செய்தது குறிப்பிடத்தக்கது.

(ஒ)

# இந்தியக் கடற்படைக்குப் புதிய கப்பல்கள்

மும்பை, ஜன. 24
இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்ட ஐ. என். எஸ் மும்பை மற்றும் ஐ. என். எஸ் கிப் ஆகிய இரு போர்க்கப்பல்களும் இந்தியக் கடற்படையில் நேற்று முன்தினம் இணைக்கப்பட்டன.

நவீன தொழில் நுட்பம் மற்றும் ஆயுதங்களைக் கொண்டுள்ள இவ் விரு கப்பல்கள் இணைக்கப்பட்டதால் கடற்படையின் பலம் அதிகரித்துள்ளதாக கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

(ஒ)

# கும்பமேளாவின் முக்கிய தினமான மௌனி அமாவாசை இன்று

கும்பநகர், ஜன. 24
அலகாபாத்தில் நடைபெறும் மகாகும்பமேளாவின் அதி முக்கிய புனித நீராடல் இன்று இடம்பெறுகின்றது.

பௌஷி பூர்ணிமா தினமான

## உலக அரங்கில்

கடந்த 9 ஆம் திகதி முதல் திரிவேணி சங்கமத்தில் கும்பமேளா விழா நிகழ்ந்து வருகிறது.

கும்பமேளாவின் போது பல லட்சம் மக்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகிறார்கள்.

இந்த விழாவின் அதி முக்கிய புனித நீராடல் மௌனி அமாவாசை எனப்படும் தை அமாவாசை தினமான இன்று இடம்பெறுகிறது.

இதை யொட்டி பெரும் எண்ணிக்கையிலான பக்கள் கங்கை, யமுனா, சரஸ்வதி ஆகிய நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் நீராடுகிறார்கள்

புனித நீராடிய பக்தர்களின் எண்ணிக்கை இன்றுடன் 3 கோடியைத் தாண்டும் என்று நம்பப்படுகிறது.

(ஒ-10)

# 'மிர்' விண்வெளி நிலையத்தை விழுத்தும் முயற்சிகள் ஆரம்பம்

மொஸ்கோ, ஜன. 24
ரஷ்யாவின் 'மிர்' விண்வெளி நிலையத்தை பூமியில் விழுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரஷ்ய விண்வெளி ஆய்வு மையம் அறிவித்துள்ளது

கடந்த 15 ஆண்டுகளாக விண்ணில் சுற்றி வந்த 'மிர்' விண்வெளி நிலையத்தை தொடர்ந்து பராமரிக்கத் போதிய நிதி வசதி இல்லாத தால் இதனைப் பூமியில் விழுத்தி விட ரஷ்ய அரசு முடிவு செய்தது.

விண்வெளியில் விண்வெளி நிலையத்தைக் கைவிட்டால செயற்கைக் கோள் போன்றவற்றுடன் மோதிச் சேதப்படுத்தும் என்பதாலேயே அதனை விழுத்தத் தீர்மானிக்கப்பட்டது

இந்த முடிவின் படியே தற்போது ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முதலில செயற்கைக் கோள் ஒன்றுடன் 'மிர்' விண்வெளி நிலையம் இணைக்கப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என்றும்.

பின்னர் படிப்படியாக பூமியின் ஈர்ப்பு விசைக்குள் இழுத்து வரப்பட்டு பசிபிக் சமுத்திரத்தில் 'மிர்' நிலையம் விழுத்தப்படும என்றும்,

ரஷ்ய விண்வெளி ஆய்வு மையம் விடுத்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

(ஒ-10)

## நாளை

தை 12
வியாழக்கிழமை
திதி: பிரதமை
முன் இரவு 8.58 வரை.
நட்சத்திரம்: திருவோணம்
முன் இரவு 7.58 வரை.
சுபநேரம்: 8.36 — 9.36
ராகுகாலம்: 2.06 — 12.36
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நண்பர்கள் இல்லாமல இருப்பது பகைவர்களைப் பெற்றிருப்பதைவிட மோசம்.

## அபிராமி தாச உற்சவம்

இணுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள
சிவன் ஆலயத்தில்

இன்று (24 - 01 - 2001) புதன்கிழமை
மாலை 5.00 மணிக்கு அபிராமி தாச உற்சவம்
வெகுவிமரிசையாக நடைபெறும். 6.30 மணிக்கு
அம்பாள் வீதி உலா இடம்பெறும்.

**அபிராமி அந்தாதி ஓதுபவர்**
T. M. வாசகர் (மறவநூர்)

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!

உபயம்
தாணு. வாசுதேவக்குருக்கள்
(83216) குடும்பம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க
இயக்குநர் சபை உறுப்பினர்

**திரு. அண்ணாமலை மார்க்கண்டர்**
(இளைப்பாறிய சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்)

அவர்கள்அரசமைப்பு விவகார அமைச்சினால்சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டமையையிட்டு எமது இதயம் கனிந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதுடன் அவருடைய பணிகள் தொடர மனமகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
சங்கானை ப. நோ. கூ. சங்கம்,
[சி/14930] சங்கானை.



## பசுவைக் காணவில்லை

பண்டாரக்குளம் பகுதி மருதவளவுப் பிள்ளையார் கோயிலடியில் மேய்ந்து கொண்டிருந்த ஜேசி (Jersey இன கறவைப்பசுவை 20-01-2001 இல் இருந்து காணவில்லை. இப்பசு பிறவுண்கலர், பரவலான வெள்ளை நிறமுடையதும், கொம்பு முன்வளைந்த தோற்றமும் உடையது. இப்பசுவைப் பற்றிய தகவல் தருபவர்களுக்குத்தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல் அறிவிக்க வேண்டிய விலாசம்:
க. தம்பிஐயா
இல. 27, கொண்டலடி லேன்,
(83267) நல்லூர்.



## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி லில்லிமலர் சின்னத்துரை**
(மேரகம்மா) இணுவில்

சிவபூமி 20-09-1924 சிவன்பாதம் 10-02-1994

திதி: 24–01–2001

வயிற்றில் எமைச் சுமந்து
வாழ்வு எல்லாம் எமக்காக்கி
உள்ளம் நிறைந்து நிற்கும் – எம்
உத்தமியே அம்மா!
வணங்குகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

'துரை மலர்ப் பொய்கை',
இணுவில் மேற்கு,
இணுவில். (83276)


# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

இம் மாதம் 22 ஆம் திகதி வரையும் வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருவாறு:-

[நேற்றைய தொடர்ச்சி]

**ஊர்காவற்றுறை**

[13844ஏ], [14461ஏ],
[14479ஏ], [14482ஏ],
[14482பி], [14482சி],
[14484ஏ], [14485ஏ],
[14485பி], [14485சி],
[14485டி], [14486ஏ],
[14486பி], [14486சி],
[14486டி],

**கோப்பாய்**

[167654ஏ], [177258ஏ],
[177258பி], [177287ஏ],
[177287பி], [179515ஏ],
[178149ஏ], [178149பி],
[178271ஏ], [178271பி],

**நல்லூர்**

[171274ஏ], [171628ஏ],
[177139ஏ], [177283ஏ],
[177283பி], [177310ஏ],
[177310பி], [177310சி],
[177310டி], [177310ஈ],
[177310எவ்], [159057ஏ],
[159057பி], [159057சி],
[159057டி], [159057ஈ],
[159145ஏ], [159145பி],
[159145சி], [159145டி],
[168887ஏ], [168887பி],
[168887சி], [172062ஏ],
[172062பி], [172062சி],
[172062டி], [172104ஏ],
[173551ஏ], [173551பி],
(173607ஏ), (175238ஏ),
(175239ஏ), (175239பி),
(175239சி), (175239டி),
(175260ஏ), (175280பி),
(175569ஏ), (178138ஏ),
(178138பி), (178138சி),
(178140ஏ), (178297பி),
(178297சி),
(178373ஏ), (178373பி),
(178373சி), (178373டி),
(178411ஏ), (178411பி),
(178420ஏ), (178420பி),
(178427ஏ), (178427பி),
(178435ஏ), (178435பி),
(178446ஏ), (178446பி),
(178446சி), (178448ஏ),
(178449ஏ), (178449பி),
(178451ஏ), (178453ஏ),
(178458ஏ), (178459ஏ),
(178459பி), (178470ஏ),
(178470பி), (178483ஏ),
(178483பி), (178499ஏ),
(178499பி), (179859ஏ),
(179859பி), (179880ஏ),
(179901ஏ), (179901பி),
(179947ஏ), (179947பி),
(179947சி), (179947டி),
(190020ஏ), (151924ஏ),
(170375ஏ), (175860ஏ),
(176640ஏ), (176651ஏ),
(176703ஏ), (176839ஏ),
(176994ஏ), (178558ஏ),
(178730ஏ), (178796ஏ),
(178796பி), (178796சி),
(178796டி), (187606ஏ),
(187606பி)

**சண்டிலிப்பாய்**

(166494ஏ), (175874ஏ),
(175874பி), (175874சி),
(175874டி), (175874ஈ),
(175874எப்), (175874ஜி),
(176521ஏ), (176795ஏ),
(176805ஏ), (176805பி),
(178524ஏ), (178533ஏ),
(178534ஏ), (178534பி),
(178556ஏ), (178575ஏ),
(178672ஏ), (178672பி),
(178672சி)

**நல்லூர்**

(178711ஏ), (178711பி),
(178711சி), (178715ஏ),
(178725ஏ), (178782ஏ),
(178782பி), (178829ஏ).

**தெல்லிப்பழை**

(172776ஏ), (175883ஏ),
(176587ஏ), (176587பி),
(178673ஏ), (178673பி),
(178673சி), (178673டி),
(178673ஈ), (178673எவ்),
(178704ஏ), (178728ஏ),
(178728பி), (179130ஏ),
(179130பி).

**உடுவில்**

(177026ஏ), (177028ஏ),
(177028பி), (177057ஏ),
(177248ஏ), (177256ஏ),
(177256பி), (177256சி),
(177256டி), (177256ஈ),
(177256எவ்), (177256ஜி),
(177256எச்), (177284ஏ),
(177302ஏ), (177302பி),
(177302சி), (177302டி),
(177312ஏ), (177312பி),
(177312சி), (179539ஏ),
(128734ஏ), (128734பி),
(128734சி), (176529ஏ),
(176529பி), (176529சி),
(176923ஏ), (176923பி),
(176923சி).
(178574ஏ), (178624ஏ),
(178747ஏ), (178747பி),
(178824ஏ), (178824பி),
(173833ஏ), (178833பி),
(178834ஏ), (178834பி),
(179081ஏ), (179111ஏ),
(179111பி), (179111சி),
(179112ஏ).

**வேலணை**

(14458ஏ), (14458பி),
(14458சி), (14472ஏ),
(14472பி), (14472சி),
(14483ஏ), (14486ஈ),
(14286எப்), (14487ஏ),
(14487பி), (14487சி),
(14487டி),

(ஐ-10-5)

## குன்றும் குழியுமாக ஈச்சமோட்டை வீதி

அரியாலை, ஜன. 24

ஈச்சமோட்டை பிரதான வீதி கடந்த பல வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாமல் குன்றும்குழியுமாகக் காணப்படுவதால் பொது மக்கள் பெரும் சிரமத்துடனேயே போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஊ-17)


## துயர் பகிர்வோம்

மருதங்கேணி வைத்தியசாலை
பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய
Dr. K. சிதம்பரநாதன் அவர்களின்
அன்புப் புத்திரி

**திருமதி வாசுகி தியாகராஜா**
(ஆசிரியை, த. ம. வி. திருவையாறு)

அவர்கள் 17-01-2001 அன்று மல்லாவியில் காலமாகிவிட்டார் என்ற செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தாரின் துக்கத்தில் நாமும் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அபிவிருத்திச் சபை,
மருதங்கேணி வைத்தியசாலை.
(சி/14942)



## கண்ணீர் அஞ்சலி

மருதங்கேணி வைத்தியசாலையின்
பொறுப்பதிகாரியாகக் கடமை புரிந்த
டாக்டர் திரு. கே. சிதம்பரநாதன்
அவர்களின் சிரேஷ்ட புதல்வி

**திருமதி வாசுகி தியாகராஜா** அவர்கள்
(ஆசிரியர், த. ம. வி. திருவையாறு)

17 – 01 – 2001 இல் காலமான செய்தி கேட்டு, அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்.

இவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்று அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

தலைவர், நெறியாளர்கள்,
பொதுமுகாமையாளர், பணியாளர்கள்.
வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. ச,
உபய கதிர்காமம், மருதங்கேணி.
புலோலி. (83282)



உ

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் விக்கிரம ஞூ தை மீ 3ஆம் நாள் (16-01-2001) செவ்வாய்க்கிழமை முருகனடி சேர்ந்த

**பிரம்மஸ்ரீ சாம்பசிவசர்மா இந்திரசர்மா**
அவர்களின்
[சப்பச்சிமாவடி, சாவகச்சேரி]

ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

25–01–2001 வியாழக்கிழமை பகல் 10 மணி தசாகம்
26–01–2001 வெள்ளிக்கிழமை ஏகோதிட்டம் மாசிகம்
27–01–2001 சனிக்கிழமை சபிண்டீகரணம்
28–01–2001 ஞாயிற்றுக்கிழமை பகல்12மணிகிருஹயக்ஞம் (மதிய போசனம்)

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி முருகனடி சேர்ந்த அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
சாம்பசிவசர்மா வாலாம்பிகை
குடும்பத்தினர்.

தற்போதைய முகவரி:
கலட்டி அம்மன் கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (83285)

# மேற்கு நாட்டுத் தூதர்களுடன் ஜனாதிபதி சந்திரிகா சந்திப்பு

கொழும்பு,ஜன.24

பிரிட்டிஷ், நோர்வே, ஆஸ்திரேலியா உட்பட்ட மேற்கு நாடுகளின் தூதுவர்களுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திங்கட்கிழமை சந்தித்து நீண்ட நேரம் கலந்துரையாடியதாகத் தெரியவருகிறது.

அரசாங்கத்தின் செயற்பாடுகளைத் தெளிவுபடுத்துவதற்காக ஜனாதிபதி இடைக்கிடையே வெளிநாட்டுத் தூதுவர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டு வருகின்றார். என்று கூறப்படுகிறது.

மிகவிரைவில் ஐரோப்பிய நாடாளுமன்ற ஒன்றியத்தின் தூதுக்குழு கொழும்பு வரவிருப்பதால் அதற்கு முன்னோடியான நடவடிக்கைகள் தொடர்பாக திங்களன்று நடந்த சந்திப்பில் ஆராயப்பட்டிருக்கலாம் என அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

ஐரோப்பிய ஒன்றியக் குழுவின் விஜயத்தின் போது ஜனாதிபதி ஆலோசனை மாநாடு ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் அப்போது இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவிகள் வழங்குவதை தாமதப்படுத்தும் போக்கை நிவர்த்திப்பது குறித்து ஆலோசிக்கப்படலாம் எனவும் தெரியவருகிறது.

ஐரோப்பிய ஒன்றியக்குழு இந்த விஜயத்தின் போது அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்திப்பதுடன், வடக்குக்குச் சென்று நிலைமைகளைக் கண்டறியவிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## நாளை உற்சவம் ஆரம்பமாகும்

# குருநகர் புதுமை மாதா ஆலயத்தின் சுற்றாடல் வீதிகள் மோசமான நிலையில்

வரலாற்றுச் சிறப்பு மிக்க குருநகர் பரிசுத்த புதுமை மாதா தேவாலயத்தின் சுற்றாடலிலுள்ள இரு வீதிகள் போக்குவரத்துக்குப் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றன.

இந்த வீதிகள் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று புதுமை மாதா சனசமூக நிலையத்தினால் யாழ்.மாநகர சபைக்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ள போதிலும் இது வரைக்கும் இவற்றினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

யாழ்.ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகத்தினால் யாத்திரிகர் தலமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள பரிசுத்த புதுமை மாதா தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் சமய வேறுபாடின்றி கலந்து கொள்ளும் இந்த உற்சவத்தில் குறிப்பிட்ட இரு வீதிகளையே மக்கள் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தவுள்ளனர்.

இந்த ஆலயத்தின் வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 3 ஆம் திகதி முடிவடைய உள்ளதால் அதற்கு முன்னராவது இவ் வீதிகள் திருத்தம் செய்யப்படுமா என்று குருநகர் மக்கள் ஆதங்கப்படுகின்றனர். (க-5-51)

## வாசகர் திருமுகம்

### ஓட்டுமடம் பாதைச் சேவையால் பயணிகள் சிரமம் குறைந்தது.

கடந்த 21ஆம் திகதி 'உதயனில்' தற்போது காரைநகர் - யாழ் போக்குவரத்து பஸ்கள் ஓட்டுமடம் பாதையூடாகச் செல்வதால் பயணிகளின் சிரமம் என்றவாறாக வெளியாகிய செய்தி மிகவும் கவலை தருவதாகவுள்ளது.

வலிகாமம் மேற்கு, காரைநகர் பகுதிகளை யாழ்.நகரின் மையப் பகுதியுடன் இணைக்கும் குறுகிய பாதை ஓட்டுமடம் பாதையே என்பது யாவரும் அறிந்ததே.

இப் பகுதிகளிலிருந்து யாழ்.நகரை நோக்கி அதிகாலையே புறப்படும் பாடசாலை மாணவர், அரச ஊழியர்கள், வர்த்தகர்கள் எனப் பல துறையினரும் இப்பாதை எப்போது திறக்கப்படும் என்ற ஏக்கத்துடன் எதிர்பார்த்த கனவு பல சிரமங்களின் மத்தியில் தற்போது நடந்தேறியுள்ளது.

இக் குறுகிய பாதை திறக்கப்பட்டதால் அங்கிருந்து நகரை நோக்கி வரும் பல தரப்பட்டவர்களும் சுமார் 20 நிமிடங்கள் முன்பாக நகரை வந்தடைய முடிகின்றது. குறிப்பாக பாடசாலை மாணவர், தனியார் கல்வி நிறுவனத்துக்கு வரும், உயர்தர மாணவர்களுக்கு அவர்களது நேர தாமதமும், சிரமமும் பெருமளவு குறைந்துள்ளது.

ஒரு சிலரின் சுயஇலாபத்திற்காக பெருமளவு மக்களதும், மாணவர்களதும் அன்றாட பிரயாணத்திற்கு இடர் விளைவிக்கக் கூடாதென்பதை பொறுப்பானவர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

அன்றாடப் பயணிகளின் போக்குவரத்தை இலகுபடுத்துவதே பஸ் சேவையின் முக்கிய நோக்கமென்பதை யாவரும் உணர்ந்து செயற்படுவதே மனிதாபிமானமான செயலாகும்.

- சி.ரமேஸ்குமார்.

*தங்கோடை,*
*காரைநகர்.*

### சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவனின் ஆதங்கம்

நான் இடம் பெயர்ந்து ஏழாலை வடக்கில் வசித்து வருகிறேன். அன்று தொட்டு இன்று வரை உதயன் பத்திரிகையின் தீவிர வாசகன் நான். தென்மராட்சி நகரில் தலை சிறந்து விளங்கும் தேசிய பாடசாலையான சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஜி.சீ.ஈ. (உயர்தர) வகுப்பில் 2002ஆம் ஆண்டு கலைப்பிரிவில் கல்வி கற்று வருகிறேன்.

எமது பாடசாலை தற்பொழுது நெல்லியடியிலும் இணுவில் முறையே நெல்லியடி மகா வித்தியாலயம் இணுவில் மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் மிகுந்த வளக் குறைகளுடன் இயங்கி வருகிறது.

நெல்லியடி மகா வித்தியாலயத்தில் காலை 8 மணி முதல் 2 மணி வரை இயங்குகின்றது. ஆனால் இணுவில் மத்திய கல்லூரியில் 11.45 மணி முதல் மாலை நேர பாடசாலையாக இயங்குகின்றது. இங்கு கற்பதற்கு மாணவர்கள் வட்டுக்கோட்டை வடலியடைப்பு, தொல்புரம், யாழ்ப்பாணம், கொக்குவில் தெல்லிப்பழை சுன்னாகம் போன்ற இடங்களில் இருந்து கொளுத்தும் வெயிலில் மிகுந்த கஷ்டத்துடன் செல்கிறார்கள்.

இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் பலர் முகாம்களிலும் வாழ்கின்றனர். மதிய உணவை உட்கொள்ளாமல் வந்து அவர்கள் பாடசாலையில் மயங்கியும் வீழ்கின்றனர். இவ்வாறான சிரமங்களை எதிர் கொள்வதால் மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியில் எமது பாடசாலையை இயங்க ஏற்பாடு செய்யப்படுகின்றது இதற்கு வசதியாக தளபாடங்கள் சாவகச்சேரியில் இருந்து ஏற்றிவருவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் அதிகமாக வசிக்கும் இடங்களைக் கவனத்தில் எடுத்து அதற்கேற்ப வசதிகளைச் செய்வதை விடுத்து திடீரென முடிவுகளை எடுப்பது சரியா?

மானிப்பாய்க்குச் செல்வதற்கு பஸ்சேவை சீராக இல்லை. நிர்வாகத்தினர் இவ்வாறு தன்னிச்சையாக எடுப்பதால் மாணவர்களே சிரமம் அடைய நேரிடுகிறது.

*ஏழாலை.* - ஒரு மாணவன்

### நவாலிப் பகுதியில் மின் கம்பங்களில் எரியும் அரிக்கன் லாம்புகள்!

நவாலியிலுள்ள பல பிரதான வீதிகளுக்கு இலங்கை மின்சார சபையினால் மின்சாரம் வழங்கப்படாத காரணத்தினால்-

சின்னப்பா வீதியைச் சேர்ந்த மக்கள் இரவு வேளையில் அரிக்கன் லாம்புகளைக் கொளுத்தி மின்கம்பங்களில் தொங்க விடுகின்றனர்.

இதனால் அப்பகுதிகளில் அடிக்கடி இடம்பெறும் திருட்டுக்களைத் தவிர்ப்பதற்குப் பெரும் உதவியாக உள்ளது என்று மக்கள் தெரிவித்தனர். (க-100)

### மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.24

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட முதலாம் வருட மாணவன் செல்வன் திருச்செகநாதன் வரோதயனின மிருதங்க அரங்கேற்றம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி இ.குமாரவடிவேல் தலைமையில் அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய அன்னசுரபி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.பல்கலைக்கழக உயர்கல்விப் பட்டப்படிப்புகள் பீடாதிபதி அ.சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையை கோ.சந்திரசேகரமும், ஆசியுரைகளை நல்லை ஆதன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் ஆகியோரும் மதிப்பீட்டுரையை பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.கணபதிப்பிள்ளையும், சிறப்புரைகளை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் க.சிவாஜி, செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

வரோதயன், லயஞானவாரிதி சி.மகேந்திரனின் மாணவராவார். (ஐ-10)

### மின்சாரசபை தனியார்மயம் ஆகாது

இலங்கை மின்சாரசபை தனியார்மயப்படுத்தல் தொடர்பாக உலக வங்கியோ அல்லது வேறு எந்தவொரு ஸ்தாபனமோ அரசாங்கத்திடம் பிரேரணை எதையும் சமர்ப்பிக்கவில்லை என்று மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

அவ்வாறு சமர்ப்பித்திருக்கும் பட்சத்தில் அந்தப் பிரேரணை அரசாங்கத்தால் உடனடியாக நிராகரிக்கப்பட்டிருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-10)

## காரைநகரில் கும்பாபிஷேகம்

காரைநகர் பாலாவோடை குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்மன் கோயில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.39 மணிக்கும் 8.00மணிக்கும் இடையில் வரும் சுபவேளையில் நடைபெற உள்ளது.

அரியாலை சிவஸ்ரீ ச.முரளிதர குருக்கள் பிரதம சிவாச்சாரியாராக இருந்து கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்துவார். கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாக உள்ளன. இங்கு புதிதாக அமைக்கப்பட்ட இராஜ கோபுரத்திற்கும் அன்றைய தினம் மகா கும்பாபிஷேகம் நடைபெறும். (ஐ-73)

# ஜனாதிபதியின் உருவப்படம் புலிச் சின்னத்துடன் கலண்டர்!

## நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபம்

கொழும்பு,ஜன.24

ஒரு பக்கத்தில் ஜனாதிபதியின் உருவப்படத்தையும் மறுபுறத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சின்னத்தையும் தாங்கிய 'பொக்கட்' கலண்டர் ஒன்று வெளிவந்துள்ளது என்றும் இதனை வெளியிட்டவர் யார் என்பதைக் கண்டறிய வேண்டும் என்றும் ஐ.தே.கட்சியின் ஏ.எச்.எம். அஸ்வர் எம்.பி திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் குழுக்களின் பிரதித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

கடற்றொழில் நீரியல்வள சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் தொடர்பான பிரேரணை மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அஸ்வர் எம்.பி. ஒழுங்குப் பிரச்சினையொன்றைக் கிளப்பி இந்த விடயத்தை சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோது அது பற்றிக் கவனம் செலுத்துவதாக குழுக்களின் பிரதித் தலைவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் ஒழுங்குப் பிரச்சினை அல்ல என்றும் பிரதித் தலைவர் குறிப்பிட்டார். (க)

# காட்டுக்கு விறகு வெட்டச் சென்ற 15பேர் படையினரிடம் சிக்கினர்

## மட்டு. கோப்பாவெளியில் சம்பவம்

கொழும்பு,ஜன.24

செங்கலடி பதுளை வீதியிலுள்ள கோப்பாவெளி காட்டுக்கு விறகு வெட்டச்சென்ற 15 பேர் விசேட அதிரடிப்படையினரால் கைதாகி பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

சனிக்கிழமை காலையில் செங்கலடி விநாயகபுரம் கிராமத்திலிருந்து கோப்பா வெளிக்கு 19 பேர் விறகு வெட்டச் சென்றனர். அப்போது அங்கு பதுங்கியிருந்த விசேட அதிரடிப்படையினர் 15 பேரைக் கைது செய்துள்ளனர். 4 பேர் தப்பிச் சென்று உறவினர்களிடம் இது தொடர்பாகத் தெரிவித்தனர்.

இதையடுத்து உறவினர்கள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானாவிடம் முறைப்பாடு செய்தனர். அவர் மட்டக்களப்பு இராணுவ, விசேட அதிரடிப்படை மற்றும் பொலீஸ் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்ததை அடுத்து இவர்கள் அன்றைய தினம் மாலையே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளதாக புகார் கூறப்படுகிறது. (க)

# மிதிவெடி அனர்த்தங்களால் கடந்த வருடம் 44 பேர் படுகாயம்

## இம்மாதத்தில் மட்டும் 10 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.24

கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் 44 பேர் மிதி வெடிகளால் படுகாயமடைந்துள்ளதாக மிதிவெடி செயற்பாட்டு உதவிக்குழுவின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

மீளக்குடியமராத இடங்களுக்குச் செல்லல், மர்மப் பொருள்களைக் கண்டெடுத்துப் பரிசோதித்தல் போன்ற பல காரணங்களினால் இந்த அனர்த்த சம்பங்கள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை -

இந்த வருடம் ஆரம்பித்து 21 நாள்களில் பத்து மிதிவெடிச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-5)

## யாழ். பல்கலைக்கழக

# வெளிவாரிப் பரீட்சை 2ஆம் திகதி ஆரம்பம்

காரைநகர்,ஜன.24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் வெளிவாரிப் பரீட்சைகள் அடுத்த மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன.

முதற்கலைத்தேர்வு, வணிகமாணி பகுதி II, சிறப்புக்கலைத் தேர்வு பகுதி III ஆகிய பரீட்சைகளே நடத்தப்பட உள்ளன.

இந்தப் பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகளையும், நேரசூசியையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் வெளிவாரிப் பரீட்சைகள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பரீட்சைகள் யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்திலும் நடத்தப்பட உள்ளன.

இதேவேளை-

கடந்த ஆண்டு நடைபெற்ற முதல் வணிகத் தேர்வு பரீட்சையில் கணிதத்தை துணைப்பாடமாக விண்ணப்பித்த பரீட்சார்த்திகளும் மேற்படி பாடத்திற்குத் தோற்றுமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ-73)

## இறந்த மற்றும் காணாமல்போன

# படையினரின் குடும்பங்களுக்கு விசேட அடையாள அட்டைகள்

கொழும்பு,ஜன.24

வடக்கு-கிழக்கு போரில் இறந்த மற்றும் காணாமல் போன படையினரின் குடும்பங்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட உள்ளன. இதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

இந்த விசேட அடையாள அட்டைகள் போரில் இறந்து போன அல்லது காணாமல் போன படையினரின் விதவை மனைவிக்கு அல்லது அவர் திருமணமாகாவிட்டால் அவரது பெற்றோருக்கு வழங்கப்படும்.

இதற்காக இறந்த அல்லது காணாமல் போன படையினர் இறுதியாகப் பணியாற்றிய இடம்,போர் இடம் பெற்ற இடம் போன்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இக் குடும்பங்கள் தமது கருமங்களைத் துரிதமாகச் செய்வதற்கு உதவுவதற்கே இந்த விசேட அடையாள அட்டைகள் வழங்க ஏற்பாடாகியுள்ளது. (க)

### கோப்பாய்ப் பகுதியில் அடிக்கடி மின் தடை

கோப்பாய்,ஜன.24

கோப்பாய்ப் பகுதியில் அடிக்கடி மின்சாரத்தடை ஏற்படுகின்றது.

இரவில் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் மின்வெட்டு இடம் பெறுவதுடன் ஒரு மணித்தியாலத்தில் பல தடவை மின்சாரம் தடைப்படுகின்றது.

இதனால் இப்பகுதி மக்கள் பாதிப்படைந்துள்ளதுடன் மாணவர்களும் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். (க-72)

# சாவகச்சேரி வர்த்தகர்களின் கடன் வட்டி வீதம் குறைப்பு

தென்மராட்சி,ஜன.24

இடம்பெயர்வினால் தொழில்களை இழந்துள்ள வர்த்தகர்களின் நலன் கருதி சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் இடம் பெயர்வுக்கு முன்னர் வர்த்தகர்கள் மன்றில் பெற்ற கடன் தொகையை திருப்பிச் செலுத்தும் காலத்தை அதிகரித்ததுடன் கடனுக்கான வட்டியையும் 50 வீதத்தினால் குறைத்துள்ளனர்.

அத்துடன் மன்றத்தின் மாதாந்த சந்தாவினையும் 50 ரூபாவில் இருந்து 25 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இவை 2001 ஜனவரி முதல் அமுல்படுத்தப்படும் என சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்தில முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-117)

# கூட்டுறவுப் பயிற்சி நிறுவனம் வவுனியாவில் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜன.24

வவுனியா பூந்தோட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணக் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அன்றைய தினம் வடக்கு- கிழக்கு மாகாண பிரதம செயலர் கிருஸ்ணமூர்த்தியினால் வைபவரீதியாக இந்தப் பயிற்சி நிறுவனம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தப் பயிற்சி நிறுவனத்தில் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களுக்கான முதலாவது பயிற்சிநெறி பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பித்து வைக்கப்படும்.

பயிற்சி நிறுவனத்தின் அதிபராகக் சி.கந்தசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

பயிற்சி நிறுவனம் வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவுத் துறைக்கான அதி உயர் கல்வி நிறுவனமாக விளங்கும் என்று கூட்டுறவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.(உ-17)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்.வை.எம்.சி.ஏ. அனுசரணையுடன் யாழ்மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் பாடசாலைகளுக்கிடையில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆடுகளத்தில் இன்று பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆண்கள் பிரிவில் சென். ஜோன்ஸ் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதவிருக்கின்றன. (ஜ-3)

## அபிவிருத்தி நிலையத்தில் பயிற்சி

தென்மராட்சி பிரதேசசெயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது வேறு பிரவுகளில் வசித்து வருகின்ற ஜீசிஈ(சாதாரணதர) பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தென்மராட்சி மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் பயிலுநர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவர்கள் தமது விண்ணப்பப் படிவங்களைத் தங்கள பகுதி நிரந்தர கிராம அலுவலரிடம் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர்கள் விண்ணப்பப் படிவங்களைச் சிபார்சு செய்து இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்பு இணுவிலில் இயங்கும் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேசசெயலர் கேட்டுள்ளார். (ஜ-10)

## மூக்குக் கண்ணாடி வழங்கலும் திறப்பு விழாவும்

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் இரண்டாவது கட்ட இலவச கண்ணாடி வழங்கும் விழாவும் வல்வெட்டித்துறை நகர சபையின் உதவியுடன் அமைக்கப்பட்ட போசன கூடத் திறப்பு விழாவும் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை மாவட்ட வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் கே.மயில்லேறும்பெருமாள் தலைமையில் நடைபெறும்.

யாழ்பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர் டாக்டர் சி.சிவஞானசுந்தரம் போசன கூடத்தைத் திறந்து வைப்பார்.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் இலவச கண்ணாடிகளை வழங்குவார்.

இவ்விழாவில் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம், பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர்கள் ஆ.சிவசுவாமி, செ.ஸ்ரீநிவாசன், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.பி.வேலாயுதபிள்ளை, பருத்தித்துறை பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் நா.மகேந்திரன், பிரபல சட்டத்தரணி இ.உருத்திரா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ஜ-173)


கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன!

குட்வில் தொலைத்தொடர்பு நிலையத்தினர் தமது முதலாம் ஆண்டு நிறைவையொட்டி இன்றிலிருந்து கட்டணங்களைக் குறைத்துள்ளார்கள்.

புதிய கட்டணங்களுடன் உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றார்கள்...

GOOD WILL TELECOM CENTRE

| | கிழமை நாள்களில் | ஞாயிறு விடுமுறை மாலை 6 மணியின் பின் (எல்லா நாள்களிலும்) | வரும் அழைப்புகள் |
|---|---|---|---|
| உள்ளூர் | 05.00 | 03.00 | 02.00 |
| உள்நாடு | 08.00 | 05.00 | 03.00 |
| வெளிநாடு அழைப்பு | 75.00 | 65.00 | 04.00 |

மிகக் குறைந்த கட்டணம்; இனிய வரவேற்பு! தளராத சேவை; இவற்றுடன் இன்னும் பல அரிய சலுகைகள்!!

மறவாதீர்கள்.....

குட்வில் தொலைத் தொடர்பு நிலையம்,
48,சென்பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

T.P.:021-3332 (83184)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
21 - 10 - 1950



மறைவு
05 - 02 - 2000

பிரபல வர்த்தகர்

## அமரர் காசிப்பிள்ளை நந்தகுமாரன்

(உரிமையாளர், மங்கை ஸ்ரோர்ஸ் - கரந்தன்)

திதி:- 24-01-2001

பாசமிகு தந்தையாய் பாரினில் எமை வளர்த்து
வாழ்விலே வளம் பெற்று நாம் வாழ வழி அமைத்த
தந்தையே! தாங்கள் மறைந்து ஆண்டொன்று
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்!

*தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்*

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளை.

*கரந்தன்,*
*நீர்வேலி.*

(83251)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
27 - 01 - 1908



விண்ணில்
24 - 01 - 2000

## அமரர் சவரிமுத்து சின்னப்புநாயகம்

(இளைப்பாறிய அதிபர்)

சீவியத்தில் நேசித்தோரே
மரணத்திலும் மறவாதீர்கள்!
என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*படித்தமகளிர் திட்டம்,*
*மிருசுவில்.*

(83093)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும்
யாழ். குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் கார்த்திகேசு ஆறுமுகம்

அவர்கள்

தோற்றம்
18 - 10 - 1912



மறைவு
25 - 12 - 2000

அன்பின் திருவுருவாய் அணையா
அகல் விளக்காய் இருந்து எமக்கு
வாழ்வளித்த முன்னறி தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவாக.....

- குடும்பத்தினர்.

*32, இராசசிங்கம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(83152)

# நீங்காத நினைவலைகள்

முதலாம் ஆண்டு

பிறப்பு
29 - 11 - 1913



இறப்பு
24 - 01 - 2000

அமரர்

## மனுவல் மிக்கேல்பிள்ளை

ஐந்தாம் ஆண்டு

பிறப்பு
02 - 02 - 1923



இறப்பு
17 - 02 - 1996

திருமதி

## மரியப்பிள்ளை மிக்கேல்பிள்ளை

தந்தையே!

ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி - நீங்கள்
மீளாத்துயில் கொண்டு
ஆண்டு ஒன்று ஆனதையா!
ஆறாதையா எம் மனங்கள்
நித்தம் நினைத்தெம் சிந்தை கலங்குதையா!
உங்கள் அன்பை பொறுப்பை நினைத்தோமையா!
நிலைகொள்ளாத் தவிப்பில் நாங்கள்
அகம் நெகிழ்ந்து அஞ்சலிக்கின்றோம்.

தாயே!

தன்னிலை மறக்க வைக்கும்
கனிவான பேச்சைக்கேட்டு
ஆண்டுகள் ஐந்து ஆனதம்மா!
ஐந்தல்ல ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
உங்கள் நினைவுகள் மட்டும்
எங்கள் நெஞ்சமதில் நீங்காமல்
நிலைத்து நிற்க - நாங்கள்
அகம் நெகிழ்ந்து அஞ்சலிக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*32, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.*

(83186)

# இராணுவம் முன்னேறும் போது மட்டும் ஐ.தே.க., ஜே.வி.பி. மௌனம் சாதிப்பது ஏன்?

## அமைச்சர் திசாநாயக்க எழுப்பும் கேள்வி

கொழும்பு,ஜன.24

யுத்தத்தில் நாம் பின்னடைந்த போதெல்லாம் சந்தோசப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சியும், ஜே.வி.பியும் இராணுவம் முன்னேறும் போது மௌனம் சாதிக்கின்றன. இது ஏன் என்பது புரியவில்லை?

இவ்வாறு கூறியுள்ளார் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிச் செயலாளரும் அமைச்சருமான எஸ்.பி.திசாநாயக்க.

தொடர்ச்சியான பின்னடைவு காரணமாகவே விடுதலைப்புலிகள் இயக்கம் யுத்த நிறுத்தத்தை அறிவித்தது. விடுதலைப்புலிகளுடனான கொடுக்கல் வாங்கலுக்கு முடிவு கட்டவே நாம் தயாராகி வருகிறோம். புலிகளின் நிபந்தனைகளுக்கு நாம் தயாரில்லை. ஈழக்கோரிக்கை தவிர்ந்த வேறு எது தொடர்பாகவும் நாம் புலிகளுடன் பேசத்தயார் என்று அமைச்சர் கூறினார்.

சமாதான முயற்சிகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

யுத்தத்தைத் தொடரும் அதே வேளை சமாதான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பித்தாலும் பிரபாகரனின் தமிழீழக் கோரிக்கை குறித்து நாம் பேசத் தயாரில்லை. நோர்வேயூடான சமாதான முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் மாற்றமில்லை. தமிழ் மக்களுக்கு எம்மால் வரலாற்று ரீதியான தவறு இழைக்கப்பட்டுள்ளது. அதிகார பகிர்வினூடாகவே அவர்களின் அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டும்.

ஆனையிறவு வீழ்ந்த பின் யுத்தத்துக்கு 33 பில்லியன் ரூபா மேலதிக செலவிடப்பட்டது. அதனாலேயே மக்கள் மீது கூடுதல் சுமை ஏற்றப்பட்டது. பொருள்களின் விலைகளும் உயர்ந்து தற்பொழுது புலிகளுக்கெதிரான யுத்தம் உக்கிரமாக மேற்கொள்ளப்படுகின்றது. புலிகளுக்கு பாரிய பின்னடைவு ஏற்பட்டு வருகிறது. அதனாலே புலிகள் யுத்தநிறுத்தத்தை அறிவித்துள்ளனர் - என்றார். (க)

# நிவாரணமாகத் தரமான அரிசி வழங்கப்படுவதை உறுதி செய்க!

## ப.நோ.கூ. சங்கங்களுக்கு அறிவுறுத்தல்

அரியாலை,ஜன.24

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண விநியோகத்திற்கு தரமான அரியை அரச களஞ்சியங்களில் உறுதி செய்து பெற்று வழங்கும் படி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கே. சண்முகநாதன் கேட்டுள்ளார்.

நிவாரணத்துக்குத் தரக்குறைவான அரிசியை வழங்குவது கண்டு பிடிக்கப்பட்டால் அந்த அரிசியைக் கொள்வனவு செய்த உத்தியோகத்தர் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இடம் பெயர்ந்த மக்களும் தமக்கு நிவாரணமாக வழங்கப்படும் அரிசியைப் பார்த்துப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

தரக்குறைவான அரிசி வழங்கப்பட்டால் மக்கள் உடனடியாக முறைப்பாடு செய்ய வேண்டும்.

இப்படி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

சென்ற தடவை நிவாரண விநியோகத்தின் போது சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தரக்குறைவான அரிசியை வழங்கியமை கண்டு பிடிக்கப்பட்டது தெரிந்ததே.(உ-17)

# ஊர்காவற்றுறையில் புதிய சுற்றுலா விடுதி

காரைநகர்,ஜன.24

ஊர்காவற்றுறையில் முப்பது லட்சம் ரூபா செலவில் சுற்றுலா விடுதி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது

இதற்கான நிதிகளை வடபகுதிக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை வழங்கியுள்ளது.

இந்தச் சுற்றுலா விடுதி ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள கடற்கரைப்பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்றது.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடமும் இப்பகுதியிலேயே அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-73)

# துரையப்பா விளையாட்டரங்கில் எல்லே, கபடி, கிரிக்கெட் போட்டிகள்

## 27 ஆம் திகதி முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.24

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் விளையாட்டு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையேயான எல்லே, கபடி, மென் பந்து கிரிக்கெட் மற்றும் உதைபந்தாட்டப் போட்டிகள் இம்மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டிகளுக்கான சகல ஏற்பாடுகளையும் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் செ. திருமாறன் மேற்கொண்டு வருகிறார்.

எல்லே போட்டிகள் இம்மாதம் 27, 28 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் கபடிப்போட்டி 30,31 ஆம் திகதிகளில் பிற்பகல் 3 மணிக்கும் மென்பந்து கிரிக்கெட் பெப்ரவரி 3,7ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கும் உதைபந்தாட்டப்போட்டி பெப்ரவரி 5,6,8 9 16, 19,21 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன. (க-5)

## அன்னாசிப்பழம் நூறு ரூபாவாக விற்பனை

அரியாலை,ஜன.24

யாழ்.நகரில் அன்னாசிப்பழம் விற்பனைக்கு வந்துள்ளது. ஒன்று நூறு ரூபாவாக விற்கப்படுகின்றது.

இந்த அன்னாசிப்பழங்கள் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

## சகோதரர் இருவர் கைது

யாழ்ப்பாணம்,ஜன.24

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த இரு சகோதரர்கள் கடந்த 19ஆம் திகதி காலை 7 மணியளவில் அவர்களது வீட்டில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வண்ணார்பண்ணை பெரியதம்பிரான் கோயிலடியைச் சேர்ந்தவர்களான குணசேகரம் குணதாசன் (வயது22), குணசேகரம் குணதீபன் (வயது20) ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.(உ-5)

## முறைசாரா பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,ஜன.24

யாழ்.மத்திய கல்லூரியின் முறைசாராக்கல்விப் பிரிவினால் ஆரம்பிக்கப்படவுள்ள பத்திரிகைத்துறைப் பயிற்சி நெறிக்கென ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இப்பயிற்சி நெறிக்கான நேர்முகப்பரீட்சை அடுத்த மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஜ10)

## இன்று கரப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள்

வலி.வடக்கு.ஜன.24

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள் இன்று புதன் கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் சட்டநாதர் ஆலயத்துக்கு அருகில் உள்ள யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறும்.(ஐ-86)

## ஆன்மீகக் கண்காட்சி

வட பிராந்திய சத்திய சாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக்குழு இளைஞர்சபை நடத்தும் மனித மேம்பாடுகள் ஊடான ஆன்மீகக் கண்காட்சி எதிர்வரும் வெள்ளி, சனி ஆகிய நாள்களில் காலை 9.00 மணி முதல மாலை 5.00 மணிவரை யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ஐ-86)

# அபிராம் அம்பிகையின் அருளினைப் பெற்ற அபிராமிப் பட்டரின் அதி அற்புத சாதனை!

"உதிக்கின்ற செங்கதிர் உச்சித்
திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்போது
மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்
குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன்
விழுத்துணையே"

அபிராமி அம்பிகையிடத்து அளவற்ற பக்தி கொண்ட அபிராமிப்பட்டரால் அருளப்பட்ட அபிராமி அந்தாதியின் ஆரம்பப்பாடல் இது. இன்றைய விஞ்ஞானிகளாற் கூட நிகழ்த்த முடியாத ஒரு நிகழ்வைத் தமது பக்தியினால் செய்து காட்டியவர் அபிராமிப் பட்டர்.

அமாவாசை, பூரணை ஆகிய தினங்கள் பதினைந்து நாள்களுக்கு ஒருமுறையே நிகழும். இதுவே இயற்கை. அதேபோல அமாவாசை தினத்தில் பூரணையோ, பூரணை தினத்தில் அமாவாசையோ நிகழ்வதில்லை. ஆனால் அமாவாசை தினத்தன்று பூரணச் சந்திரனை வானத்தில் உதிக்கச் செய்து சாதனைபுரிந்த பக்திமான் இவர்.

இன்று தைஅமாவாசை. இத்தினத்தில் நடைபெற்ற அற்புதம் பற்றிய கதை ஒன்றுண்டு.

சோழ நாட்டில் திருக்கடவூர் என்ற ஒரு தலம் உள்ளது. அங்குள்ள அம்பிகையின் பெயர் அபிராமி. மார்க்கண்டேயருக்காகக் காலனை உதைத்த சங்கார மூர்த்தி எழுந்தருளியிருக்கும் தலமும் இதுவேயாகும். அங்கே சுப்பிரமணியம் என்னும் அந்தணர் பஞ்சாங்கம் படிப்பவராகத் தொண்டாற்றி வந்தார்.

சுப்பிரமணியம் அம்பிகையையே தமது முழுமுதற் கடவுளாக மனதிற் கருதி வழிபாடாற்றி வந்தார். ஆலயத்தில் தொண்டு செய்ததுடன் தமது வீட்டிலும் அபிராமியின் திருவுருவத்தையும் ஸ்ரீ சக்கரத்தையும் வைத்துப் பூசித்து வந்தார்.

சிலர் இவருடைய பெருமையை உணராது இவரைப் பற்றிக் கீழ்த்தரமான வதந்திகளைப் பரப்பி வந்தனர்.

அக்காலத்தில் தஞ்சைநகரை ஆட்சி செய்த சரபோஜிமன்னர் தை அமாவாசையன்று இந்த ஆலயத்திற்கு வந்தார். ஆலய நிர்வாகிகள் மன்னரை உரிய மரியாதையுடன் வரவேற்றனர். அவர் ஒவ்வொரு சந்நிதியாகச் சென்று வழிபாடு செய்து ஈற்றில் அபிராமியின் சந்நிதிக்கு வந்தார்.

அவ்வேளை சுப்பிரமணியம்

## அமாவாசை பூரணையாகிய மகிமை

அங்கே இறைவியின் சந்நிதியில் கண்களை மூடித்தியானத்தில் இருந்தார். மன்னர் வந்ததை சுப்பிரமணியம் உணரவில்லை.

இவரை அவதானித்த மன்னன் "யார் இவர்?" என்று விசாரித்தார்.

"இவர் இங்கே பஞ்சாங்க படனம் செய்பவர். சிறிது மனமயக்கம் உள்ள பித்தர்" என ஒருவர் பதிலளித்தார். அப்போது வாத்தியங்கள் முழங்கின. சுப்பிரமணியம் சிறிது தெளிவுபெற்று கண்களைத் திறந்தார்.

உடனே மன்னர், இவரைப் பரிசோதிக்க எண்ணி "இன்று என்ன திதி?" என்று கேட்டார்.

"இன்று பூரணை"

சுப்பிரமணியத்தின் வாயிலிருந்து இந்த வார்த்தைகள் வெளிவந்தன. அது கேட்ட மன்னர் 'அவர் மயக்கம் உள்ளவர். என்பது உண்மைதான்' என்று கூறிவிட்டுச் சென்றார்.

சிறிது நேரம் கழித்து சுய உணர்வு வரப்பெற்ற சுப்பிரமணியம் தாம் இன்று பூரணை என்று தவறுதலாகக் கூறியதை உணர்ந்தார். அங்கே குழுமி இருந்தவர்கள் இவரைப்பாத்து பரிகாசம் செய்யத் தொடங்கினார்கள். அவர் மிகுந்த வேதனை அடைந்தார். ஆனால் சுயமாகத் தாம் அப்படிக் கூறவில்லை என்பதனையும் அம்பிகையின் திருவிளையாடலே இது என்பதனையும் உணர்ந்து கொண்டார்.

தம்மீது ஏற்பட்ட களங்கத்தை அபிராமி மூலமே நீங்கச் செய்ய வேண்டும் என்று அந்த ஆலயத்தின் வாயிலில் பெரிய குழி வெட்டி அதன் மேல் நூறு நூலகள் கொண்ட உறியைத தொங்கவிட்டார்.

குழியினுள் அக்கினியை வளர்த்து அவர் உறியின் மீது ஏறி அமர்ந்து கொண்டார். அம்பிகை பேரில் "அபிராமி அந்தாதி" பாடுவது எனவும் ஒவ்வொரு பாட்டும் முடிய ஒவ்வொரு நூலாக அறுப்பது எனவும் நூறு பாடல்கள் பாடியும் அம்பிகையின் அருள் கிடைக்காவிட்டால் அக்கினியுடன் சங்கமமாவது எனவும் தீர்மானித்தார். தீர்மானித்த வண்ணமே அந்தாதிப்பாடல் பாடினார். இரவும் வந்தது. அவர் 79 ஆவது பாடல் பாடும் போது அந்த அற்புதம் நிகழ்ந்தது. அவர் முன்னே காட்சி கொடுத்த அம்பிகை தன் காதிலிருந்த தோடு ஒன்றைக் கழற்றி ஆகாயத்தில் வீசி எறிந்தார்.

உடனே வானத்தில் பூரண சந்திரன் தோன்றியது. அப்போது அவர் பாடிய பாடல் வருமாறு:

"விழிக்கே அருளுண்(டு) அபிராம
வல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு)
எமக்(கு) அவ் வழி கிடக்கப்
பழிக்கே சுழன்று எம் பாவங்க
ளே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்
மோடென்ன கூட்டினியே"

வானத்தில் பூரண சந்திரனைக் கண்ட அனைவரும் ஆச்சரியமடைந்தனர்.

சரபோஜி மன்னனும் அதனைக் கண்டு 'அற்புதம் அற்புதம்' என்று துள்ளினார். அந்தப் பெரியவரின் வாகைக் காப்பாற்ற அம்பிகையே இந்த அற்புதத்தைப் புரிந்துள்ளார் என உணர்ந்தார். உடனே அவரைப்பார்க்க ஆலயத்தை அடைந்தார்.

அங்கே சுப்பிரமணியம் தொடர்ந்து நூறு பாடல்களையும் பாடி முடித்தார்.

மன்னர் அவரின் கால்களில் வீழ்ந்து வணங்கித் தம்மை மன்னிக் கும்படி வேண்டினார்.

இதுவே அபிராமி அந்தாதி ஆகும். ஒரு பாடலின் நிறைவுச் சொல் அடுத்த பாடலின் ஆரம்பச் சொல்லாக அமைவதே அந்தாதி எனப்படும். அக்காரணத்தால் இப்பாடல் 'அபிராமி அந்தாதி' என வழங்கப்படுகிறது.

சுப்பிரமணியம் அன்று முதல் அபிராமிப்பட்டர் என அழைக்கப்பட்டார்.

விண்வெளியில் சூரியனும் சந்திரனும் ஒரே நேர்கோட்டில் வரும் போது அமாவாசை நிகழ்கிறது. இதே போல ஒன்றுக்கொன்று நேர்எதிரில் காட்சி தரும் போது பூரணை நிகழ்கிறது.

**கு.சிவபாலசுந்தரம்பிள்ளை**

ஆகவே பூரண சந்திரன் காட்சி அளிப்பதனால் சூரியனின் நேர்கோட்டில் இருக்கும் சந்திரன் எதிர்த்திசைக்கு அசைக்கப்பட வேண்டும். இதனையே அபிராமி அம்பிகை செய்து தனது பக்தனின் மீது ஏற்பட்ட களங்கத்தைப போக்கியுள்ளார்.

இது விஞ்ஞானிகளினால் கூடச் செய்ய முடியாத ஒன்று. மனிதனின் ஆற்றல் இறைவனின் முன்னே வெகு அற்பமானது. இதனை உணர்த்துவதே இந்த நிகழ்வாகும். எனவே அபிராமிப்பட்டருக்கு அம்பிகை அருள் புரிந்த இந்தத் தை அமாவாசைத் தினத்தில் சைவர்கள் யாபேரும் அம்பாளை வழிபட்டு அவளது பெருங் கருணைக்கு பாத்திரர்களாவார்களாக.❊




# இன்று அபிராமிப் பட்டர் விழா

யாழ்.வண்ணை, கலட்டி எச்சாட்டி மஹாமாரி அம்மன் திருக்கோயிலில்

இன்று (24-01-2001) புதன்கிழமை காலை 6 மணிக்கு அபிஷேக விசேட பூசை
பிற்பகல் 2.30 மணி சாயங்காலப் பூசை
பிற்பகல் 3.00 மணி அபிராமி அந்தாதி பாடல் ஆரம்பம்
பிற்பகல் 4.30 மணி வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதி வலம் வருதல்.

அபிராமி அந்தாதி ஓதுபவர்:-
**T. M. வாசகர்**
தவில், மிருதங்க, பாடல் கலைஞர்
மறவநூர்.

*பிரதம குரு:* பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவக்குருக்கள்

*ஆலய குரு:* பிரம்மஸ்ரீ சி. சிவமோகனசர்மா

*உபயம்:* பிரம்மஸ்ரீ நா. திவாகரசர்மா குடும்பம்

*அனைவரும் வருக! அபிராமி அருள் பெறுக!*
*சுபமஸ்து*

(83261)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

256, கடற்கரை வீதி, நாவாந் துறையைச் சேர்ந்த பேதுருப் பிள்ளை வில்லியம் அன்ரன் என்ப வருடைய தே.அ.அட்டை(இல. 5630 82631V) யாழ்ப்பாணத்திற்கும் பருத் தித்துறைக்குமிடையில் 09.01.2001 இல் தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்ப டைத்து உதவவும். (83255)

காரைநகரைச் சேர்ந்த வைத்தி லிங்கம் பாலாமணி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல. 388220376V), விசேட அ.அட்டை என பன 19-01-2001 அன்று பரமேஸ்வராச் சந்திக்கும் ஆரியகுளம் சந்திக்கும் இடையில் (பலாலி வீதி) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து "கிளின் சொட்" **123A** மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம், யாழ் நகர் எனும் முகவரியில் ஒப்படைக்க வும். சன்மானம் வழங்கப்படும்.(83271)

சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை ஆசிரியையான செல்வி அனுஷா டொறிற்றா என்பவருடைய தே.அ.அ. (இல.766111262V)உட்பட, விசேட, தொழில், கல்வி அடையாள அட் டைகள் கொண்ட கைப்பை மேற் படி பாடசாலைக்கும் சென்பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் 18.01.2001 இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர் கள் மேற்படி பாடசாலை அதிபரிடமோ, பங்குத் தந்தையிடமோ (யாகப்பர் ஆலயம்) ஒப்படைத்துதவவும். (83277)

## விற்பனைக்கு

கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட 17 முச்சக்கர வண்டி (ஓட்டோ) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வ.புவனேந்திரன், சுழிபுரம் வடக்கு, சுழிபுரம். (83268)

நல்ல நிலையிலுள்ள, ஒருவரின் தனிப்பாவனையிலுள்ள **FORD ESCORD** கார் (**FOUR DOORS**) உடன் விற்பனைக்கு உண்டு, தொடர்பு:- இல.9, வேலப்பர் லேன், கனகரட்ணம் றோட், அரியாலை. (83238)

## புறொயிலர் குஞ்சு

5 நாள் நிரம்பிய புறொயிலர் இன கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. விலை **60/-** தொடர்பு: 388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பா ணம். **T.P.29பூ, 2409.** (83265)

## கைமாறிவிட்டது

ரூபி நகை மாளிகை, கஸ்தூரி யார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் ஸ்தாபனத்திற்கு முன் நிறுத்தப்பட்டி ருந்த லுமாலா சைக்கிள் 19.01.2001 வெள்ளியன்று கைமாறி எடுத்துச் செல்லப்பட்டு விட்டது. தவறுதலாக எடுத்தவர்கள் மேற்காணும் முகவரி யுடன் தொடர்பு கொள்ளவும். சன்மா ணம் வழங்கப்படும். (83258)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி புறொயிலர், சேவல், கல்பேட்ஸ் என்பன விற்ப னைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: இல.31, மான்ஸ் பாடசாலை வீதி, (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) உடுவில், சுன்னாகம். (83173)

## யாழ்ப்பாணம்

இலக்கியக் கட்டுரைகள் விமர் சன நூலை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் ஏனைய நூல் கள்:- 1. யாழ்ப்பாணம்-சிறுகதைத் தொகுப்பு, 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூல், 3.நாடகம் எழுதுவது எப்படி? 4.யாழ்ப்பாணத் தில் அந்த ஆறு மாதங்கள். (83012)

## தவறிவிட்டது

50/1, கண்டிவீதி, சுண்டுக்குழி யைச சேர்ந்த யே.கிறிஸ்தீனாப்பிள்ளை என்பவருடைய தே.அ.அட்டை (இல. 445330116V) வி.அ.அ. (இல.0901013 936) **V**.புஸ்பவதி என்பவருடைய தே.அ.(இல.626293204V) வி.அ.அ (0901014252) என்பன 22.01.2001இல் சுண்டிக்குழிக்கும் பஸ்ரியன் சந்தி மரக்கறிக் கடைக்குமிடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் மேற் படி விலாசத்தில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (83274)

## முகாமைத்துவ டிப்ளோமா பரீட்சை

திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படவிருக்கும் முகாமைத்துவ டிப்ளோமா பரீட்சை பெப்ரவரி 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்பிராந்திய நிலையத்தில் நடை பெறும் இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை பெப்ரவரி முதலாம் திகதி முதல் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (ஐ-5)

## புகையிலைச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளில் இம்முறை புகை யிலைச் செய்கையில் விவசாயிகள் பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இவர்கள் புகையிலை நாற்றுக் கன்றுகளை வடமராட்சி பகுதியில் பொலிகண்டி, கரணவாய், கரவெட்டி ஆகிய இடங்களில் கொள்வனவு செய்து கொண்டு வந்து [illegible] நட்டு வருகின்றனர்.

அப்பகுதிகளில் 75 சதம் தொடக் கம் ஒரு ரூபா வரை புகையிலை நாற்று கன்று ஒன்று விற்கப்பட்டு வருகின்றது. (க-135)

## மாதாந்த விஞ்ஞானக் கருத்தரங்கு

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்க தூய விஞ்ஞானப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தை மாத கருத் தரங்கு எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பௌதிகத்துறை மண்டபத் தில் நடைபெறஉள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாவரவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஜெயராணி நந்தகுமார் "யாழ் குடா நாட்டில் பாதீனியம் (**Parthenium hysterophorus**) என்னும் அந் நியக் களையின் ஊடுருவலும் அதன பாதிப்பும்" என்னும் பொருளில் கருத்துரை வழங்குவார். (க)

## ஒரு லட்சத்து 60 ஆயிரம் பேர் சிகிச்சை

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு வைத்திய சாலையில் ஒரு லட்சத்து 60 ஆயி ரத்து 500 பேர் கடந்த ஆண்டு சிகிச்சை பெற்றுள்ளதாகப் பதிவு கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 935 பேருக்கு சத்திர சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-10)

## நிவாரணம் வழங்குவதற்கு அரசு ஆலோசனை

மண்ணெண்ணெய்யின் விலை அதி கரிப்பை அடுத்து மீனவர்கள் மற்றும் கிரமப்புற மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

இவர்களுக்கு நிவாரணம் வழங் குவது பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வரு வதாக கடற்றொழில் நீரியல் அபிவி ருத்தி அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திறைசேரியுடன் நிவாரணம் வழங் குதல் பற்றிக் கலந்தாலோசித்த பின னரே அது வழங்கப்படல் வேண்டு மென்று பிரதமர் தெரிவித்துள்ளார். (ஐ-10)

## அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.24

நீர்வேலி கந்தசுவாமி கோயிலின் பிரதமகுரு அமரர் சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்களின் நினை வஞ்சலிக் கூட்டம் கடந்த சனிக் கிழமை ஆலய மண்டபத்தில் நடை பெற்றது.

ஆலய பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட இந்த அஞ்சலிக் கூட் டத்தில் இந்துக் குருமார்கள் மற்றும் சமயப் பெரியார்கள் கலந்து கொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தினர். (ஐ-17)

---

குடியியல் சட்டத்தின் 529ஆம் பிரிவை திருத்திய 1977ஆம் ஆண்டின் 20ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட முதலிலேயே முற்றான கட்டளையைப் பற்றிய

## அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, அரசடி வீதியில் வசித்த காலஞ்சென்ற

**தில்லையம்பலம் கார்த்திகேசு கைம்பெண் சிவபாக்கியம்**

என்பவரின் மரணசாதன விடயத்தில் மரணமெய்தியவர் மரணச் சொத்து நியாயாதிக்க இலக்கம் 3961

இறந்துவிட்டார்.....

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, அரசடி வீதியில் வசிக்கும் நமசிவாயம் சந்திரராசா

மனுதாரர்

மேற்படி வழக்கு முடிவுறாதிருக்கையில் இறந்த குறித்த மனுதாரரின் இடத்திற்குப் பதிலீடு செய்யப்பட்ட சட்டப் பிரதிநிதி யாழ்ப்பாணம், திருநெல்வேலி, அரசடி வீதியில் வசிக்கும்

**நமசிவாயம் சந்திரராசா கைம்பெண் கனகம்மா**

குறித்த சட்டப் பிரதிநிதி

எதிர்

எதிர்வாதி என ஒருவரையும் குறிப்பிடவில்லை.

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, அரசடி வீதியில் வசித்த காலஞ் சென்ற தில்லையம்பலம் கார்த்திகேசு கைம்பெண் சிவபாக்கியம் என்பவரால் நிறைவேற்றப்பட்ட மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி இலக்க வழக்கு இம்மன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றும் அவ்வழக்கில் கோரியபடி முதலிலேயே முற்றான கட்டளை 1986ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதியன்று பதியப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2001ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02ஆம் திகதி

மன்றின் கட்டளைப்படி
**நு.சிறீமோகன்**
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

வரைந்தவர்
**அ.சண்முகநாதன்**
*மேற்படி மனுதாரரின்*
*சட்டப்பிரதிநிதியின் சட்டத்தரணி*

(83229)

---

## இலங்கை மின்சாரசபை யாழ். பிரதேசம் மின்தடை பற்றிய அறிவித்தல்

காங்கேசன்துறை மின் நிலையத்தில் அவசர திருத்த வேலைகள் செய்ய வேண்டியிருப்பதனால் 29.01.2001 வரை பகல் நேர மின் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கீழ்[illegible]ரும் அடிப்படையில் சுழற்சி முறையில் பகல்நேர மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

01. 09.30 - 12.00 -
மருதனார்மடம், தாவடி, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில், சிவப்பிரகாசம் வீதி, ஆனைக்கோட்டை, நாவாந்துறை.

02. 12.00 - 04.30 -
வடமராட்சி, அச்சுவேலி, புன்னாலைக்கட்டுவன்.

03. 12.00 - 06.30 -
வலிகாமம் மேற்குப் பகுதி, மானிப்பாய், உடுவில், கந்தரோடை, சுன்னாகம், மல்லாகம்.

இதனைவிட தற்போது அமுலில் இருக்கும் இரவு நேர, காலை நேர மின்வெட்டுக்கள் வழமைபோல அமுலில் இருக்கும் என்பதனை பாவனையாளர்கள் கவனத்தில் கொள்க.

பிரதேச மின் பொறியியலாளர்,
*இலங்கை மின்சார சபை,*
*யாழ்.பிரதேச அலுவலகம்,*
*சுன்னாகம்.*

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சாரசபை. (C/14945)

---

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 27 - 01 - 1908



அமலனின் அடியில் 24 - 01 - 2000

அமரர்
**சவரிமுத்து சின்னப்புநாயகம்**
(ஓய்வு பெற்ற அதிபர்)

மண்ணகத்தை விட்டேகி ஆண்டு ஒன்று போனாலும்
விண்ணகத்தில் நீ ஏகி நீடூழி வாழ வேண்டுகின்றோம்.

சீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் மறவாத
**பிள்ளைகள், மருமக்கள், பேரர்கள், பீட்டர்கள்.**

*36, சந்தனமாதா வீதி,*
*பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம்.* (83260)

---

## நெஞ்சகலா நினைவலைகள்

17ஆம் வருடம் 3 ஆம் மாதம்

மண்ணில் 09 - 03 - 1917



விண்ணில் 01 - 02 - 1984

**திருமதி அசுபதி சின்னத்தம்பி**
(திதி: 24.01.2001)

மண்ணில் 09 - 03 - 1910



விண்ணில் 05 - 11 - 2000

அமரர் சித்தவைத்திய கலாநிதி
**கோ. சின்னத்தம்பி (DAM. RIMP)**
(ஸ்ரீ பராசக்தி அம்பாள் அறங்காவலர்)

பார் பரவு பராசக்தி அம்மைநிழல்
பரவி நிதம் சுகம் கண்ட அன்புப் பெற்றோர்.
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

*ஆக் லேன்,*
*உடுவில்.*

(C/14935)

# காலாவதியான பொருள்களை அழித்து விடுமாறு பணிப்பு!

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவுறுத்து

அரியாலை, ஜன. 24

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் விற்பனை இன்றித் தேங்கிக்கிடக்கும் காலாவதியான பொருள்களை உடனடியாக அழித்து விடுமாறு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் கூட்டுறவுச் சங்கங்களைக் கேட்டுள்ளார்.

காலாவதியான பால்மா பைக்கட்டுக்கள், பிஸ்கட் வகைகள் மற்றும் பொருள்களை கூட்டுறவுச் சங்கங்கள் உரிய முறைப்படி அழித்துவிட வேண்டும்.

மனித பாவனைக்கு கேடு விளைவிக்கும் காலாவதியான பொருள்களை கிளைமுகாமையாளர்கள் விற்பனை செய்யக் கூடாது. அவ்வாறு விற்பனை செய்து முறைகேடான விதத்தில் நடந்து கொண்டால் அவர்கள் மீது திணைக்களம் கடும் நடவடிக்கை எடுக்கும் என்றும் ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

காலாவதியான பொருள்களை சங்கங்களின் களஞ்சியங்களிலும் வைக்க வேண்டாம் என்றும் அது குறித்து சங்க நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தி அவற்றையும் அழித்துவிட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-17)

# கடந்த 10 வருட காலப் பகுதியில் பிரிட்டனில் 20 ஆயிரம் இலங்கையர் சட்டபூர்வமாகத் தங்க அனுமதி

கொழும்பு, ஜன. 24

1989 ஆம் ஆண்டு முதல் 1999ஆம்ஆண்டுவரைபிரிட்டனில் வசிப்பதற்கு 19,740 இலங்கையருக்குப் பிரிட்டிஷ் அரசு அனுமதி வழங்கியுள்ளது என்றும் அவர்களில் மிக அதிகமானோர் தமிழர்கள் என்றும் பிரிட்டிஷ் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

1999 ஆம் ஆண்டில் 5,370 இலங்கையருக்கும் 1998 இல் 2, 100 பேருக்கும் இந்த அனுமதி கிடைத்தது. 1999 இல் இந்த எண்ணிக்கை இரண்டு மடங்கானது. இந்த எண்ணிக்கையானது சட்டரீதியாகப் பிரிட்டனில் தங்க அனுமதிக்கப்பட்ட இலங்கையினது புள்ளி விவரமாகும். சட்டவிரோதமாக ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் தற்போதும் இங்கு தங்கியுள்ளனர். இவர்களது விவரங்கள் இதில் அடங்கவில்லை எனவும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேசமயம் இவ்வாறான ஆயிரக்கணக்கான அரசியல் புகலிடம் தேடும் இலங்கையரின் விண்ணப்பங்கள் பல தற்போது பிரிட்டிஷ் குடிவரவு அமைச்சின் பரிசீலனையில் உள்ளன.

1991 இல் அரசியல் புகலிடம் தேடி விண்ணப்பித்த இலங்கையரின் எண்ணிக்கை 3,765 ஆகும். இந்த எண்ணிக்கை 1999 இல் 5,130 ஆக அதிகரித்தது. எனினும் 99 இல்30 பேருக்கு மட்டுமே இங்கு அரசியல் புகலிடம் வழங்கப்பட்டது.

இதற்கிடையில் விண்ணப்பதாரிகள் பலர் பிரத்தியேக அனுமதியொன்றின் கீழ் அங்கு தங்கியிருக்க அனுமதிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பிரிட்டனிலிருந்து விடுதலைப்புலிகள் நிதி சேகரிப்பது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இலங்கையும், இந்தியாவும் பிரிட்டிஷ் அரசை வலியுறுத்தியுள்ளன.

பிரிட்டனில் வசிக்கும் தமிழர்களில் பெரும்பான்மையானோர் புலிகளின் ஆதரவாளர்கள் என்றும், இவர்கள் ஒவ்வொரு மாதமும் புலிகளுக்கு நிதியுதவி வழங்கி வருகின்றனர் என்றும் இந்த இரு நாடுகளும் முறையிட்டுள்ளன என்றும் தெரிய வருகிறது. (க)

## ஊர்காவற்றுறைப் பிரதேச சபையில்

# 11 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

ஊர்காவற்றுறை, ஜன. 24

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையில் அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளில் கடந்த இரண்டு வருடங்களாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் 11 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான அனுமதி வடக்கு — கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் இருந்து பெறப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கான நிரந்தர நியமனங்களை 06-09-2000 ஆம் திகதியிலிருந்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வருமான மேற்பார்வையாளர், தொழிலாளர் மேற்பார்வையாளர், சாரதி, ஆயுர்வேத மருந்துக் கலவையாளர், காரியாலய காரியசகாயர், 'பம்' இயக்குநர், நூலகத் தொழிலாளி, சுகாதாரத் தொழிலாளி ஆகிய பதவிகளைச் சேர்ந்த மேற்படி 11 ஊழியர்களுக்கே இவ்வாறு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஐ-16)

## கலந்துரையாடல்

அரியாலை, ஜன. 24

திக்கம் வடிசாலையைப் பனை அபிவிருத்திச் சபை பொறுப்பேற்றுக் கொண்டதை அடுத்து பனை அபிவிருத்திச் சபை மற்றும் வடமராட்சி பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய கலந்துரையாடல் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலுக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே சண்முகநாதன் தலைமை வகிப்பார். (ஐ-17)

# திட்ட முன் மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு கோரிக்கை

ஊர்காவற்றுறை, ஜன. 24

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சகல கிராம அபிவிருத்திச் சங்கங்களையும் தமது கிராமத்தில் இந்த ஆண்டு முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்களை உடன் சமர்ப்பிக்குமாறு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் சம்பந்தப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர், செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

இதற்கமைய சங்கத்தின் விசேட பொதுக்கூட்டத்தைக் கூட்டி அதில் முன்மொழியப்பட்ட வேலைத்திட்டகளின் கூட்ட அறிக்கையின் இரு பிரதிகளை நேரில் கொண்டு வந்து கையளிப்பதுடன் சங்கத்தின் நிதி மற்றும் வங்கிக் கையிருப்புக்களையும் மாதாந்தம் அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ஐ-16)

# கிராம அலுவலர்களின் அரிய கலைமுயற்சிக்குப் பாராட்டு

## வீடியோ நாடா வெளியீட்டு விழாவில்

சண்டிலிப்பாய், ஜன. 24

''கிராம அலுவலர்களின் செயற்பாடுகள் பற்றி தினமும் பல்வேறு வகைப்பட்ட செய்திகள் பத்திரிகைகள் மூலம் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. எமது பிரதேசத்தில் கலைகள் வளர்ச்சியடைவதற்கு கிராம அலுவலர்களும் தங்கள் பங்களிப்பைச் செய்ய முடியும் என்பதை இங்கு இன்று வெளியிடப்படும் வீடியோ ஒளி நாடா மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகிறது 'வெளிநாட்டு மாப்பிள்ளை' என்ற இக் குறும் படத்தை தயாரித்து நடித்து வீடியோ நாடாவாக வெளியிட்ட இப் பிரதேச செயலக கிராம அலுவலர்கள் பாராட்டுதற்குரியவர்கள். இவர்களின் கலைச் சேவைகள் எதிர்காலத்திலும் தொடர வேண்டும்.''

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கிராம அலுவலர்கள் தயாரித்த 'வெளி நாட்டு மாப்பிள்ளை' என்ற வீடியோ ஒளி நாடாவின் வெளியீட்டு விழா கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவுக்கு பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமை வகித்தார். வரவேற்புரையை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் அ. அமிர்தலிங்கம் நிகழ்த்தினார்.

மேலதிக அரச அதிபர் வைத்திலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில்: —

நான் சண்டிலிப்பாய் பிரதேச செயலராக முன்னர் இரு வருடகாலம் பணியாற்றிய போது இந்தக் குறும் படத்தில் நடித்த கிராம அலுவலர்களின் கலை ஆர்வம் பற்றி ஏற்கனவே அறிந்து கொள்ள முடிந்தது. நடிப்பாற்றல் மிக்க இவர்கள் தங்கள் அலுவலக கடமைகளுடன் நாடகங்களைத் தயாரித்து நடித்துவருவது மகிழ்ச்சிக்குரியது — என்றார்.

எழுத்தாளர் ந. சிவபாதம் (புத்தொளி) மதிப்பீட்டுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது :—

ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் நாடகங்கள், கூத்துகள் என்பன முக்கிய இடத்தை நீண்ட காலமாகப் பெற்று வருகின்றன. கலையரசு சொர்ணலிங்கம் போன்றவர்கள் பல நாடகங்களைத் தயாரித்தும் நடித்தும் கலைச்சேவை ஆற்றியுள்ளார்கள். 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்பும் எமது ஈழத்தில் கூத்து என்னும் கலை இருந்துவந்துள்ளதாக வரலாறுகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து நாடக மன்றங்களும் நடிகர்கள் டி. கே. சண்முகம் போன்ற கலைஞர்களும் இங்கு அடிக்கடி வந்து நாடகங்கள் நடத்திச் சென்றதை மறந்துவிட முடியாது. இன்று எமது இளைய சந்ததியினர் அறியப்படாத பல விடயங்களை இந்த நாடக ஒளி நாடா குறும் படத்தின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. அன்றைய காலகட்டத்து கல்யாண புரோக்கர்களுக்கும் இன்றைய காலகட்டத்து கல்யாணத்தரகர்களுக்கும் உள்ள வேறுபாடுகளை இந்த குறும் படத்தின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இன்று சீதனப் பணம் 10 லட்சம் என்றால் அதில் பத்து வீதம் கல்யாணத்தரகர்களுக்கு தரப்படவேண்டும் என்ற கோட்பாடு நிலவி வருகின்றது 10 இலட்சம் சீதனத்திற்கு 50 ஆயிரம் ரூபாவை கல்யாணத் தரகர்கள் பெற்றுக் கொண்டிருக்கின்றதையும் சில இடங்களில் அவதானிக்க முடிகின்றது—என்றார்.

முன்னாள் பிரதேச செயலர் கா. சந்திரராசா வாழ்த்துரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:-

இலைமறை காயாக இருக்கும் கலைஞர்களை வெளிக்கொண்டு வந்து அவர்களின் திறமைகளை மக்கள் அறிந்து கொள்வதற்கு இது போன்ற நிகழ்வுகள் சிறந்த சாதனமாக அமைகின்றன கிராம அலுவலர்கள் பல்வேறு கடமைகளுக்கு மத்தியில் கிடைக்கும் ஓய்வு நேரத்தில் இக் கலைப் பணியில் ஈடுபட்டு வந்துள்ளனர். தங்கள் கடமைகளை உதாசீனப் செய்யாத வகையில் இது போன்ற கலை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் — என்றார்.

வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சனும் உரையாற்றினார். இந்தக் குறுந்திரைப்பட வீடியோ படப்பிடிப்பை சிறந்த முறையில் மேற்கொண்ட பண்டத்தரிப்பு சிவாஸ் ஸ்ரூடியோ உரிமையாளருக்கு மேலதிக அரச அதிபர் பொன்னாடை போர்த்து கௌரவித்தார். (ஐ-135)

# நோயாளர் கப்பல் சேவை இனி வியாழக்கிழமைகளிலேயே

யாழ்ப்பாணம், ஜன. 24

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை இனிமேல் வியாழக்கிழமைகளிலேயே இடம்பெறும் என்று யாழ். ஆஸ்பத்திரி பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதுவரை நாளும் இக் கப்பல் புதன்கிழமைகளிலேயே இங்கிருந்து புறப்பட்டுச் செல்வது வழக்கம்.

மறு அறிவித்தல் வரும் வரை இச் சேவை வியாழக்கிழமைகளில் நடைபெறும் என்று நோயாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது (ஐ)

# திருக்குறள் பீடத்தை மீண்டும் இயங்கச் செய்ய வேண்டும்

## புனரமைப்புக் கூட்டத்தில் வலியுறுத்து

''தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் மக்களை அறநெறி வாழ்வு வாழவைப்பதற்காக இலங்கைத் திருக்குறள் பீடம்என்ற அமைப்பை அமைத்து வள்ளுவர் காட்டிய வழியில் அவர்களை வாழவைத்தார். அவர் மறைவின் பின் முடங்கிப்போயுள்ள இந் நிறுவனத்தை 21 ஆம் நூற்றாண்டின் தேவைக்கு ஏற்ற வகையில் இயங்கச் செய்ய வேண்டும்.''

இவ்வாறு பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இலங்கைத் திருக்குறள் பீடத்தைப் புனரமைப்பதற்கான கூட்டத்தில் உரையாற்றிய சமூக மருத்துவத் துறைப் பேராசிரியர் சி சிவஞானசுந்தரம் கூறினார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்தலைமையுரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

''தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் படித்தவர்கள் மட்டும் அறிந்திருந்த திருக்குறளைப் பாமர மக்களும் அறியப் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்திருந்தார். 'மிங்கைந்' அதிபர் க. கனகராசா இவரது நடவடிக்கைகளுக்குக் கைகொடுத்து உதவ இ. போ. ச. பஸ்களில் திருக்குறளை எழுதினார். பண்டிதர் க. பொ. இரத்தினம் திருக்குறள் மாநாடுகள் நடத்தினார். இவர்களது நடவடிக்கைகளால் இன்று பாமர மக்களின் நாவிலும் திருக்குறள் தவழ்கிறது — என்று கூறினார்.

கிறீஸ்தவ நாகரிகத்துறைத் தலைவர் வண. பிதா. அன்ரன் மத்தாயஸ், தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி. சி. சிவலிங்கராஜா, மெய்யியல் துறைப் பேராசிரியர் நா. ஞானகுமாரன், வித்துவான் க. சொக்கலிங்கம், ஆசிரியர் ச. ஆ. கோபாலமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர். (க)

# ஆசிரியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஜன. 24

சாவகச்சேரி சந்திரபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலய ஆசிரியர்களுக்கான ஜனவரி மாதச் சம்பளம் நாளை வியாழக்கிழமை பி. ப. 3 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் வைத்து வழங்கப்படும் என்று அதிபர் மு. பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ஐ—5)

# வாழ்த்துகிறோம்

கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்
அரியாலையூர்

## V.K. சண்முகலிங்கம் அவர்கள்

அகில இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின ரால் வடமாகாண கிரிக்கெட் பயிற்றுவிப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறித்து அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

— காவேரி சில்க்ஸ் நிறுவனத்தினர்

(சி/14953)

# யாழ். வல்லை சிவகுரு சிறுவர் செயற்பாட்டறை திறப்பு விழா

காலம்:- 25-01-2001 வியாழக்கிழமை
காலை 7.30 9.00 மணி.

பிரதம விருந்தினர்:- திரு. சி. சிவயோககுரு
உதவி வைத்திய அதிகாரி, மாவட்ட வைத்தியசாலை—வல்வெட்டித்துறை.

மகிழ்வில்
யா/வல்லை சிவகுரு வித்தியாலய பாடசாலைச் சமூகம்.

வல்வெட்டித்துறை, (83284)

# வேண்டுகோள்

130/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரியைச் சேர்ந்த

## அலக்ஸ் நிஷாபதி

ஆகிய நான் எனது தேசிய அடையாள அட்டை (இல 601641216 V), விசேட அடையாள அட்டை, கடவுச்சீட்டு (Passport) ஆகியவற்றைத் தொலைத்து விட்டேன். இம்மாதம் நான் வெளிநாடு திரும்பிச் செல்வதற்குக் கடவுச்சீட்டு முக்கியமாகத் தேவைப் படுவதால் தயவுசெய்து கருணை உள்ளத்துடன் கீழ்க் காணும் முகவரியில் கொடுத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

எஸ். ஜே. பி. ட்ரேட் ஏஜென்சி,
39, 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
(பிரதான வீதி மக்கள்வங்கிக்கு அருகில்)

(83293) T.P. 2549

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை நேற்று முன்தினம் (22-01-2001) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பொன்னையா (மாசார்) மற்றும் செல்லையா, அன்னப்பிள்ளை (கல்மடு), தங்கம்மா ஆகியோரின் சகோதரனும், சற்குணராசா (குணம் மோட்டோர்ஸ், வவுனியா), புஸ்பவதி, நாகேஸ்வரி, சோதிமலர், மங்கையர்க்கரசி, மல்லிகாதேவி, அருந்தவராசா (எண்ணெய் ஆலை, வவுனியா), இராஜேஸ்வரி, சற்குணேஸ்வரி, செல்வராசா (ஹொலண்ட்), தேவராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தா (வவுனியா), குமாரசாமி, கந்தசாமி, கைலாயபிள்ளை, பரம்சோதி (வல்லவாம்பிகை, கொடிகாமம்), பேரம்பலம் (இ. மி. ச.), அருள்நாயகி (வவுனியா), இராமச்சந்திரன் (மாசார்), நவரெத்தினம், ஆந்திரேயா (ஹொலண்ட்), சுதமதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், நித்தியா, நிவேதா, நிஷாந்தன், நிரோசனா (வவுனியா), Dr. ஜெயக்குமார் (M.B.B.S., Ceylon), ஜெயபாஸ்கரன் (பல்கலைக்கழகம் ரஷ்யா), ஜெயறஜினா, ஜெயராஜி (யாழ். பல்கலைக்கழகம்), ஜெயப்பிரதா, விஜிதா, நித்தியா, விரிஷா, கேதீஸ்வரி, லோகதாஸ், வேதாகீதன், வர்ணதாஸ், சாகித்தியன், சசிரேகா, சசிப்பிரியா, சபிதா, சஜீவன், சசிலவன், அரிகரன், அகல்ஜா, இரமேதா, இராமேஸ் கிருஷ்ணா, சஜிந்தி, சஞ்சனா, சயித்தா, சலோஜன், சனோசா, நஓமி (ஹொலண்ட்), கரிஷா, கரிஷன், பாலவடிவேல், சோமசேகரம் (ரஞ்சனாஸ், சாவகச்சேரி), பிரதாபன் (மெக்கானிக்) ஆகியோரின் அன்புப் பேரனும் சோபிகனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சு. பரஞ்சோதி
(மருமகன்)

தற்காலிக முகவரி:
க. சிதம்பரநாதன்
செங்குந்தா வீதி,
கரவெட்டி.

நிரந்தர முகவரி:
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(83289)

# செஞ்சிலுவைக் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஜன. 24

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு இன்று இடம்பெறவிருந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை நாளைய தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இன்று பயணம் செய்வதற்குப் பதிவு செய்தவர்களை நாளை பயணத்துக்குச் சமுகமளிக்கும்படியும் அவர் கேட்டுள்ளார்.

(மற்றொரு செய்தி 9 ஆம் பக்கத்தில்)

(உ-3-15-139)

# சமய சந்நிதிகளில்

ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானத்தில் அபிராமிப்பட்டர் தினத்தை ஒட்டி இன்று காலை 8 மணிக்கு விசேட பூசைகள் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் ஸ்ரீதர்ஷனனினால் அபிராமி அந்தாதி இசைக்கப்படும். (3)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 24

திருவண்ணைநகர் கன்னாதிட்டி காளியம்மன் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 6.56 மணிமுதல் 7.36 மணி வரையுள்ள சுப நேரத்தில் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை ஒட்டிய கிரியைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (ஐ-3)

★ ★ ★

நெல்லியடி, ஜன. 24

வண்ணார்பண்ணை - வடமேற்கு ஆனைக்கோட்டை ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் அபிராமிப்பட்டர் விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். (ஐ-109)

★ ★ ★

நெல்லியடி, ஜன. 24

வடமராட்சிப் பகுதியில் உள்ள கோட்டுவாசல் அம்மன் கோயில், தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில், தம்பசெட்டி பண்டாரி அம்மன் கோயில், காந்தியூர் கண்ணகை அம்மன் கோயில், வியாபாரி மூலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் கோயில், துன்னாலை மிந்திரன் அம்மன் கோயில் ஆகியவற்றில் இன்று அபிராமிப்பட்டர் விழா நடைபெறவுள்ளது. (ஐ-109)

# ஆசிரியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஜன. 24

வேம்போடுபகணி சி. சி. த. க. பாடசாலை ஆசிரியர்களுக்கான சம்பளம் இன்று புதன்கிழமை முதல் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயத்தில் இயங்கும் அந்தப் பாடசாலையில் வைத்து வழங்கப்படும் என்று அதன் அதிபர் அறிவித்துள்ளார். (-3)

# தளபாடம் விற்பனை

மாணவர்கள் குறிப்புக்கள் வாசித்து எழுதக்கூடிய வசதியுடன் கூடிய இணைந்த கதிரை விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
95, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(83297)

# பச்சிலைப்பள்ளி மக்களுக்கு நிவாரண அனுமதிப் பத்திரம்

யாழ்ப்பாணம், ஜன. 24

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரண அனுமதிப் பத்திரங்கள் நாளை வியாழக்கிழமை முதல் சம்பந்தப்பட்ட சங்கக் கிளைகள் மூலம் வழங்கப்படும் என உதவி அரசாங்க அதிபர் எஸ். புத்திசிகாமணி அறிவித்துள்ளார்.

வல்வெட்டிப் பகுதியில் வசிப்பவர்களுக்கு நாளை வியாழக்கிழமை வல்வெட்டித்துறை சங்கக் கிளை மூலமும்—

நெல்லியடி, சித்தங்கேணி, மற்றும் ஆனைக்கோட்டை பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் சம்பந்தப்பட்ட கிளைகள் மூலமும் -

மந்திகை, கோயில் சந்தை கிளைகள் மூலம் நிவாரணம் பெறுவர்களுக்கு வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் புலோலி உப அலுவலத்தில் வைத்தும் —

அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (உ-7)

# விவரம் பதிவு

நுணாவில் மேற்கு அ. த. க. பாடசாலையில் கல்வி கற்று தற்பொழுது இடம்பெயர்ந்து வேறு பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் எதிர்வரும் 26 ஆம் திகதிக்குமுன் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார்.

இந்த மாணவர்களுக்கு இலவச பாடநூல், சீருடைகள் வழங்கும் பொருட்டே பெயர் விவரங்கள் பதிவு செய்யப்படவுள்ளன. (ஐ-5)

# பாலர் ஆசிரியர் தேவை

சான்றிதழுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

'முத்தமிழ் பாலர் பாடசாலை',
ஆடியபாதம் வீதி,
நல்லூர். (83299)

# தொண்டர் ஆசிரியர் கவனத்துக்கு!

இலங்கை வித்தியாலய அதிபர் சங்கத்தில் பதிவு செய்து இன்றுவரை கடமையாற்றி இதுகாலவரை நிரந்தர நியமனம் கிடைக்காத தொண்டர் ஆசிரியர்கள் 25-01-2001 ஆம் திகதிக்கு முன் செயலாளர், இலங்கை வித்தியாலய அதிபர் சங்கம், சிவகிரி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். என்ற விலாசத்துக்கு பெயர், பாடசாலை விவரங்களை அனுப்பிவைக்கவும்.

செயலாளர்,
இலங்கை வித்தியாலய அதிபர் சங்கம்.
(83301)

# அமரர் ஸ்ரீ பாஸ்கரன்

ஞாபகார்த்தமாக
மூக்குக் கண்ணாடி விநியோகம்

தலைவர்:- சபா ரவீந்திரன் சட்டத்தரணி J.P U.M.

இடம்:- தும்பளை கிழக்கு சனசமூக நிலையம்
காலம்:- 28-01-2001 ஞாயிறு மு. ப. 8-00 மணி

எரிக்கணேஸ் ஸ்தாபனத்தினரால்
கண் பரிசோதிக்கப்பட்டு
மூக்குக் கண்ணாடி விநியோகிக்கப்படும்.

பதிவுக் கட்டணம் ரூ. 130/-

திருமதி பா. ஸ்ரீ பாஸ்கரன் தலைவர்
மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம்.
(83300)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை கந்தையா

மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும் கனகாம்பிகைக் குளத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது உபயகதிர்காமம் புலோலியில் வசித்தவருமான வேலுப்பிள்ளை கந்தையா ஞாயிறன்று காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்னுவின் அன்புக் கணவரும் சரஸ்வதி, தியாகராஜா (கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம் - பரந்தன்), சற்குருராசா, சிவானந்தம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் இளையதம்பி, மலர், சுசிலாவதி, விமலா ஆகியோரின் மாமனாரும் ஆறுமுகம், முருகேசு ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24—01—2001 (இன்று) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புலோலி ஆனைவிழுந்தான் மயானத்தில் முற்பகல் 10-00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

தகவல்;
க. சற்குருராசா
(மகன்)

நிரந்தர முகவரி:
மருதங்கேணி தெற்கு,
தாளையடி.

தற்காலிக முகவரி:
உபயகதிர்காமம்.
புலோலி தெற்கு, புலோலி.

(சி/14961)

# கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்ட

## இராமலிங்கம் பரமேஸ்வரி

அவர்கள் 21-01-2001 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்ததை அறிந்து அன்னாரின் குடும்பத்தினரின் துன்பத்தில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தேவி அச்சக குடும்பத்தினர்.

*நாவலர் வீதி,*
*(தேவி அச்சகம் ஒழுங்கை),*
*யாழ்ப்பாணம்.* (83281)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தாயின் மடியில் | | இறைவனடியில் |
|---|---|---|
| 05 |  | 25 |
| * | | * |
| 05 | | 12 |
| * | | * |
| 1950 | | 2000 |

## திருமதி நாகேஸ்வரி(யோகா) லிங்கப்பிள்ளை
(காரம்பொன் கிழக்கு)

அன்பாலும் பாசத்தாலும் அரவணைத்த அம்மா!
உங்கள் பிரிவால் என்றும் வாடுகிறோம்
ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு
மீளாத் துயில் கொண்டீர்களே?
உங்கள் நினைவு என்றும் எம்மைவிட்டு அகலாது!

இன்று (24.01.2001) புதன்கிழமை நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளு மாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

-குடும்பத்தினர்.

*10. சீனிவாசகம் வீதி,*
*கொட்டடி,*
*யாழ்ப்பாணம்.* (83291)

## புவியியற் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜன.24

யாழ்.பல்கலைக்கழக புவியியற் கழகத்தின் ஏற்பாட்டில் பிரதி புதன் கிழமை தோறும் இடம்பெறவுள்ள கருத்தரங்குத் தொடரில் முதலாவது கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிப 3 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறும்.

புவியியற்கழகத் தலைவர் எஸ்ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் யாழ்பல்கலைக் கழக பௌதிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கே.கந்தசாமி 'உடுக்கவின் பிணாம வளர்ச்சி' எனும் தலைப்பில் உரையாற்ற உள்ளார்.

புவியியற்றுறை மாணவர்கள் மாத்திரமன்றி ஆர்வமுள்ள எவரும் இக் கருத்தரங்கில் கலந்துகொள்ளலா மென செயலாளர் அறிவித்துள்ளார்.(க)

## ஆய்வு முறையியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜன.24

யாழ்.பல்கலைக்கழக புவியியல் பொதுக்கலை, சிறப்புக்கலை மாணவர்களின் ஆய்வு அறிவை மேம்படுத்துவதற்காக ஆய்வு முறையியல் கருத்தரங்கு இன்று முற்பகல் 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெற இருக்கின்றது.

புவியியற் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் மேற்படி கருத்தரங்கில் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ,பேராசிரியர் செ.பாலச்சந்திரன், பேராசிரியர் க.குகபாலன், பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், கலாநிதி எஸ்.ரி.பி.இராஜேஸ்வரன், கலாநிதி ஏ.எஸ்சூசை, கே.சுதாகர், ஆகியோர் ஆய்வுமுறையியல் சார்ந்த பல்வேறு தலைப்புகளின் கீழ் விரிவுரைகள் வழங்கவுள்ளனர். (க)

## சாரணிய கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.24

பெண் சாரண வழிகாட்டுநர் களுக்கான கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற வுள்ளது. (உ-3)

## தடுப்பு முகாமுக்கு அதிகாரி விஜயம்

யாழ்ப்பாணம்,ஜன.24

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என்.ஜீவேஸ்வரா, இன்று காங்கேசன் துறை கைதிகள் தடுப்பு முகாமுக்குச் செல்லவுள்ளார்.

# அபிராமிப்பட்டர் விழா

அருள்மிகு ஸ்ரீ பண்டாரி அம்மன் கோயில்
தம்பசிட்டி, பருத்தித்துறை

இன்று மாலை 4.00 மணியளவில் விசேட அபிசேக ஆராதனையுடன் அபிராமி அந்தாதி இசை நிகழ்வு ஆரம்பமாகும்.

அபிராமி அந்தாதி இசைப்பவர்:
இசைக்கலைமணி **திருமதி சாரதா பரஞ்சோதி**
பக்கவாத்தியம்
மிருதங்கம்: மிருதங்க வித்துவான்
**திரு.எஸ்.சிதம்பரநாதன்**
வயலின்: இசைக்கலைமணி **திரு.K.குகபரன்**

(C/14958) -தேவஸ்தானம்

# கண்ணீர்க் காணிக்கை

தீவக கல்வி வலயத்தில்
கலாசார உத்தியோகத்தராகக் கடமையாற்றியவரும்,
தற்போது நெடுந்தீவில்
கலாசார உத்தியோகத்தராக கடமையாற்றிவருபவருமான

## திரு.இ.நித்தியானந்தன்.

அவர்களின் அன்புச் சகோதரர்

## ஓவியர் திலகம் இ.கனகராஜா

அவர்கள் திருகோணமலையில் காலமான செய்தி அறிந்து மிகவும் வேதனை அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலயக் கல்வி அலுவலகம், தீவகம், வேலணை.
வலய கல்வி அலுவலக சமூகத்தினர்

(C/14960)

# கண்ணீர் அஞ்சலி

எங்கள் மகளிர் இல்ல இசை ஆசிரியராக விளங்கிய

திரு.திருமதி சிதம்பரநாதன்

அவர்களின் புத்திரியும் தெல்லிப்பழை வறுத்தலை விளானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்,
வன்னி மாவட்டம் திருவையாற்றில் பணிபுரிந்தவருமாகிய

## திருமதி வாசுகி தியாகராஜா

அவர்கள் காலமானது குறித்து
நாம் பெரிதும் துயரப்படுகின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை. (C/14955)


# சாயி வீடியோ



21ஆம் நூற்றாண்டில் என்றும் நீங்காத இடத்தைப்பிடித்துக் கொண்ட சாயி வீடியோ. கொம்பியூட்டர் உலகின் சிங்கப்பூரில் 2001ல் வெளியான **RT 2000 மல்ரி மீடியா (MULTI MEDIA)** கொண்டு புதுமைகளைப் புகுத்தி படமாக்கியும **CD** மூலம் பதிவு செய்து கொள்ளவும்.



முற்றிலும் புது மெருகூட்டப்பட்ட **சொக்கட்டான் பந்தல்கள்** (பத்து அடிக்கு ஒரு மின்விசிறி பொருத்தப் பட்டதும்), **புதிய மணவறைகள், பிளாஸ்டிக் கதிரைகள், பாய்கள்** (பந்திப்பாய்கள் உட்பட), **நிலவிரிப்புக்கள், இருக்கை விரிப்புக்கள், சில்வர் பாத்திரங்கள** என்பனவும்.

எமது படப்பிடிப்புக்கென புதுப்புனித நிராட்டு விழாவிற்கென

- பூங்காவசதி,
- நீர் அருவி
- மலை அருவி,
- பசும்புற்தரைகள்,
- ஊஞ்சல்,
- நீர் தடாகத்தில் தாமரை,
- உல்லாசக் குடைகள்,

இன்னும் பல.

- சுழல் தாமரை, அன்னவடிவு ஏனிப்படிகள்,
- குத்து விளக்குகள்,
- பூக்கூடைகள்,
- தலையில் சூட்டப்படும் குடைகள்

இன்னும் பல விசேட அம்சங்கள்.

CD மூலம் பாடல் பதிவு, கறுப்பு-வெள்ளை, உட்புற, வெளிப்புற படப்பிடிப்பு என்பன ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள

## சாயி வீடியோ அன் ஸ்ருடியோ

பஸ் நிலையம் முன்பாக,
அச்சுவேலி.

29,றக்கா றோட்,
ஜோன் பொஸ்கோ முன்பாக,
யாழ்ப்பாணம்.

(83273)

குறிப்பு:- அச்சுவேலியில் உள்ள எமது ஸ்தாபனத்துக்கு பாடல் பதிவுசெய்யத் தெரிந்த ஒருவர் தேவை.


# யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற்கழகம்

**புதிய அங்கத்தவர்களைச் சேர்த்தலும் அங்கத்துவத்தினைப் புதுப்பித்தலும்**

மேற்படி கழகத்தில் புதிதாய் இணையவிரும்பும் நாடக, நாட்டாரியல் ஆர்வலர்கள், மாணவர்கள் ஆகியோர் 15.02.2001இன் முன் பின்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து வழங்கி இணைந்து கொள்ளலாம். பதிவு செய்த அங்கத்தவர்களும் தமது அங்கத்துவப் பணத்தினைச் செலுத்தி 2001இற்கான பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

அங்கத்துவப் பணம் ரூபா 50/-
பாடசாலை மாணவர்களுக்கு ரூபா 10/-

பொ.அருந்தவநாதன் செயலாளர்
பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைவர்

உயர்பட்ட ஆய்வுபீட பணியகம்,
குமாரசாமி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(83287)

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டுக் கழகம்

மக்கள் வங்கி வட வலயத்தின் அனுசரணையுடன் Dr.D.T.நெல்ஸ் ஞாபகார்த்தமான 3ஆவது உள்ளரங்க விளையாட்டுப் போட்டி

போட்டி ஆரம்பம் : 25.01.2001
நேரம் : மாலை 3 மணி
போட்டி : கரம்
வயதுப் பிரிவினர்: (ஆண்கள்/ பெண்கள்) 10,12,14,16

V.S.மகேந்திரன்,
விளையாட்டுப் பொறுப்பாசிரியர்
T.மோகன்,
உள்ளக் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்.

(83303)

# மேலும் 10 பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதம் வந்தது

யாழ்.மாவட்டத்தில் மேலும் 10 பேருக்கு பட்டதாரிப்பயிலுநர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தீவக வலயத்துக்கு நியமனம் செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்களை தீவக வலயத்திலும், வெளிமாவட்டங்களுக்கு நியமனம் செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்களை யாழ்.கல்வி வலயத்திலும் இன்று நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ்கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் ந.வரதராசா தெரிவித்துள்ளார்.

நியமனம் வழங்கப்பட்டோரின் பெயர், விவரங்கள் வருமாறு:-

ஸ்ரீசந்திரவதனா யோகராசா-வரணி வடக்கு (கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் கல்லூரி), நடராசா கிருபாகரன்-அராலி (புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தி).அழகரத்தினம் கமலச் செல்வி-சுதுமலை (வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி ம.ம.வி), ஞானலோஜினி சதாசிவம் - சிவகுருநாதர் லேன், யாழ். (புனித அந்தோனியார் கல்லூரி), கதிர்காமநாதன் சுதர்சன் - கரணவாய் (மன்னார் பற்றிமா ம.வி.), பத்மநாதன் குமரகுருபரன் - ஏழாலை (மன்னார் சித்திவிநாயகர் இந்து), சச்சிதானந்தசிவம் ஞானரதன - உடுப்பிட்டி (மன்னார் புனித சவேரியார்), சரவணை வசந்தராசா - மல்லாகம் (மன்னார் புனித அன்னாள் ம.ம.வி.), சிவக்கொழுந்து சிவராஜா - இமையாணன் (சேனையூர் மத்திய கல்லூரி), செ.ஜசிந்தா - புன்னாலைக் கட்டுவன் (வவுனியா கணேஸ்வரா வித்தி.)

(ஐ-10)

## அவசர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் ஆகியோருக்கு பயண ஏற்பாட்டில் முன்னுரிமை வழங்கப்படும் என்றும்-

சாதாரண பொது மக்களே தமது பயணத்தைத் தாமதப்படுத்த வேண்டியிருக்கும் என்றும்-மேலும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து இருவழிப் பயணச்சீட்டுடன் வந்த பயணிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-3)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைக் கூற விரும்புகிறேன்" என்று அந்தப் பேட்டியில் அவர் சொன்னார்.

"சமாதானத்தில் ஆர்வமுள்ள சர்வதேச நாடுகள் விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த அழைப்பை வரவேற்பார்கள். எனினும் அந்த நாடுகள் தமது கருத்துக்களை வெளியிடவேண்டும்.

"இந்த விடயத்தில் நோர்வே எந்த வித அழுத்தத்தையும் இலங்கை அரசு மீது பிரயோகிக்க மாட்டாது. பக்கச்சார்பற்ற முறையில் தொடர்ந்து இந்த நடவடிக்கையில் ஈடுபடும்.

"விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் நேற்று (திங்கட்கிழமை) பேச்சு நடத்தினேன். விரைவில் கொழும்பு சென்று அரச அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவிருக்கிறேன்.

"இரு தரப்புடனும் தொடர்புகளைத் தொடர்ந்து பேணி வருவேன்" - இப்படி அவர் அந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளார். (உ-3)

# யுத்த நிறுத்தத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தநிறுத்தத்தை மேலும் ஒரு மாத காலம் நீடிப்பது பற்றிய அறிவிப்பை நேற்றுப் புலிகள் வெளியிட்டனர்.

அது தொடர்பான அறிக்கையில் புலிகள் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தற்போது இடம்பெற்றுவரும் மோதல்கள் முழு அளவிலான யுத்தமாக வெடிப்பதைத் தவிர்ப்பதற்காகவும், நோர்வே அரசால் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு மேலும் காலஅவகாசம் அளிப்பதற்காகவும் எமது யுத்தநிறுத்தத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்க முடிவு செய்துள்ளோம்.

சமாதானத்தின் மீது எமக்குள்ள நேர்மையான - மெய்யான - விருப்பத்தையும் அரசியல் பிணக்கைச் சமாதான வழிகள் மூலம் தீர்த்துக் கொள்வதில் எமக்குள்ள உண்மையான ஈடுபாட்டையும் மேலும் சில காலத்துக்கு சமாதானத்தை அனுஷ்டிக்க நாம் எடுத்த இந்தத் தீர்மானம் வெளிப்படுத்துகின்றது.

சமாதானத்தை அவாவி நிற்கும் தமிழ்த் தேசத்தின் ஒட்டு மொத்தமான உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையிலும், இந்தப் பிணக்கைச் சமாதான வழிகளில் தீர்க்கும்படி கோரி நிற்கும் சர்வதேச சமூகத்தின் விருப்பத்துக்கு இசைவாகவும் இந்த முடிவை நாங்கள் எடுத்துள்ளோம்.

எங்களது ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்த அறிவிப்பை ஒரு தந்திரம் என்று கூறி இலங்கை அரசு நிராகரித்திருப்பது குறித்து நாம் கவலையும், அதிருப்தியும் அடைந்துள்ளோம் என்பதைத் தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

இத்தகைய யுத்தத் தீவிரப் போக்கு மற்றும் செயல்களின் மூலம் யுத்தத்தில் ஈடுபடுவோரும், பொது மக்களும் எனப் பெரும் உயிரிழப்புக்கு வழிகோலும் - பேரழிவை ஏற்படுத்தும் - வன்செயல் மற்றும் யுத்தத்தையே தான் விரும்புவதை சிங்களதேசம் உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளது.

நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் நேர்மையான எமது நடவடிக்கையை அரசு அவதூறுபடுத்தியது மட்டுமல்லாமல், நாம் சமாதானத்தை அறிவித்த காலத்தில் எம்மைச் சினமூட்டும் வகையில் பெரும் படை நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

எங்களது ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்த அறிவிப்புக்கு சாதகமாகச் செயற்படுவதோடு, யுத்தத் தணிப்பையும் பொதுமக்களின் சகஜ வாழ்வையும் இலக்காகக் கொண்டுள்ள நோர்வேயின் சமாதானத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் ஸ்ரீலங்கா இணங்கினால் எங்கள் விடுதலை இயக்கமும் சமாதானப் பேச்சில் ஈடுபடத் தயார் என்பதை மீண்டும் குறிப்பிட விரும்புகின்றோம்.

யுத்தத் தீவிரப் போக்கைக் கைவிட்டு சமாதான, சமரசப் பேச்சு வழியைக் கைக்கொள்வதற்கு இணங்கும்படி இராஜதந்திர ரீதியில் ஸ்ரீலங்கா மீது அழுத்தம் கொடுக்குமாறு சர்வதேச சமூகத்தை - குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய நாடுகள் மற்றும் இந்தியாவை - நாம் மீண்டும் கோருகின்றோம்.

பிரிட்டனின் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகளைத் தடைசெய்யும்படி தான் முன்வைத்துள்ள கோரிக்கையை நியாயப்படுத்தும் வகையில் இலங்கைத் தீவில் மோதல்களைத் தீவிரப்படுத்தி, யுத்த நிலையை நீடிக்கச் செய்வதற்காகவே புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை ஸ்ரீலங்கா அரசு நிராகரித்து, சமாதானப் பேச்சுக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்க மறுத்துவருகின்றது என்பதே புலிகளின் கருத்தாகும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## தமிழ் மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நூலகத்தைப் புனரமைக்க கேள்விப் பத்திரம் கோராமல், தனிப்பட்ட ஒருவரிடம் வேலையை ஒப்படைத்தார். அரைகுறை வேலையுடன் புனரமைப்பு நிறுத்தப்பட்டது. அந்தப் பணியில் ஈடுபட்ட வேலையாள்களுக்கு ஒழுங்காகச் சம்பளம் கூட வழங்கப்படவில்லை.

இந்தப் புனரமைப்புக்குச் சேகரித்த பணம் மோசடி செய்யப்பட்டு விட்டது.

அரசாங்கத்தால் விலைக்கு வாங்கப்பட்ட - தமிழ் மண்ணில் பிறந்த-கதிர்காமர் இன்று இனத்தையே விற்கிறார். புலிகளைத் தடைசெய்யும்படி இன்று சர்வதேச நாடுகளிடம் கோரும் அவர் நாளை தமிழ் இனத்தையே தடைசெய்யும்படி கோரினால கூட ஆச்சரியப்படத் தேவையில்லை.

இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரண விநியோகத்தில் ஊழல்கள் புரிந்துவரும் யாழ்.அரசாங்க அதிபர் மீது உரிய முறையில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

யாழ்.அரசாங்க அதிபர் தனது கடமையை முறையாகச் செய்யவில்லை. நிவாரணக் கொடுப்பனவு, கப்பல் போக்குவரத்து, வேலைவாய்ப்பு ஆகியவற்றிலும் இவர் ஊழல்கள் புரிந்து வருகின்றார்.

கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாட்டிலும் இவரது மோசடிகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு செயற்படும் யாழ்.அரச அதிபர் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை- என்றார். (உ-3-7)

## மன்னாரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் என சீருடையினர் அறிவித்துள்ள போதிலும் இவர்கள் இருவரும் மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் கட்டுப்பாடற்ற பகுதிக்கும் இடையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் என மன்னார் தகவல்கள் தெரிவித்தன. (உ-7-164)


NEW SCIENCE COLLEGE
PHYSICS
2002 A/L
ஒலியியல்
(Sound)
ஆரம்பம்: 24.01.2001 புதன்
3.30 மணி
M.KARUNANITHY
(83207)

ஈசன் கல்வி நிலையம்
கோண்டாவில்.
LOGIC
S.R.J.சுதன்
"குறியீட்டு அளவையியல்"
ஆரம்பம்:-
27-01-2001
சனி 3.00 p.m
(83240)

எமது புதிய
வீடியோ CD வெளியீடு
விஜய், சூர்யா நடித்த
❄ ப்ரண்ட்ஸ்
பிரமிட் CD வெளியீடு
மனுநீதி
கன்டேன் சீதையை
நீ எந்தன் வானம்
பிரதிகள்
உடன் பெற்றுக்கொள்ளலாம்.
அஸ்டி
எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C/14956)

இறைச்சிக்கோழி
இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. அண்ணா பாம், இனுவில். மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (C/14934)

A/L 2001
ACCOUNTING
BALAVASAN
B.B.A.(F.M.Spl)
TUE., THU. →6.20 A.M.
அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு
ஆரம்பம்: 25-01-01
சயன்ஸ் அக்கடமி
நல்லூர்
(83213)

நாளை ஆரம்பம்
2000 A/L
Day Class
Com - Maths
A.பத்மநாதன்
25.01.2001 (9.00)
SUBRA (14)
(83190) சித்தன்கேணி

எமது புதிய
வீடியோ CD வெளியீடு
விஜய், சூர்யாவின்
❄ ப்ரண்ட்ஸ்
பிரதிகள்
உடன் பெற்றுக்கொள்ளலாம்.
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/14959)

உ
விராட் விஸ்வப் பிரம்மனே நம
தை அமாவாசை நிகழ்வு
அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்க, தை அமாவாசை நிகழ்வு, கடந்த காலத்தில் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நடைபெற்றது. இவ்வாண்டு உடுப்பிட்டி விஸ்வகர்மகுல வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று நடைபெறவுள்ளது என்பதை அனைத்து விஸ்வகர்மகுல திலகர்கட்கு இதை அறியத்தருவதோடு இவ்விழாவிற்கு தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.
அகில இலங்கை விஸ்வகுலதர்ம சங்கம்
(உடுப்பிட்டிக் கிளை)
(C/14964)

BEACON மாணவர்களே!
மகிழ்ச்சிகரமான செய்தி
எமது கல்வி நிறுவனத்தில் விரிவுரைகள் நடத்திய
S.S. மனோகரனின்
அனைத்து வகுப்புகளும் 27.01.2001 சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.
நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
-நிர்வாகி
(83281)

JAFFNA TECHNICAL INSTITUTE
JAFFNA, SRILANKA
Regd No.15251
COMPUTER COURSES
DIPLOMA IN SOFT WARE ENGINEERING
Duration:- 12 Months Courses Fee:-21750/=
DIPLOMA IN COMPUTER PROGRAMMING
Duration:- 9 Months Courses Fee:-8750/=
DIPLOMA IN WINDOWS APPLICATION
Duration:- 7 Months Courses Fee:-7750/=
DIPLOMA IN MICROSOFT OFFICE
Duration:- 6 Months Courses Fee:-6000/=
DIPLOMA IN DESKTOP PUBLISHING
Duration:- 4 Months Courses Fee:-5250/=
CERTIFICATE COURSES
MS Excel 2000, MS Word 2000, MS Access 2000, MS Powerpoint 2000, dBase III, Corel Draw, Page Maker and Visual Basic.
புதிய பிரிவு ஆரம்பம்:28-01-2001 (10 a.m.)
இப்பிரிவில் சேரும் மாணவர்களுக்கு
மேற்குறிப்பிட்ட கட்டணத்தில் இருந்து 25% கழிவு வழங்கப்படும்.
குறிப்பு :- புலமைப்பரிசில் 2001ல் தோற்றிய மாணவர்கள் தமது அனுமதியை 05.02.2001 க்கு முன்னர் பதிவு செய்து கொள்ளவும்.
No. 07, Palaly Road,
Jaffna.
(இலுப்பையடிச் சந்தி அருகில்)
-DIRECTOR
(C/14949)

STP
COMPUTER WORLD (PVT) LIMITED
54A, Palaly Road,
Jaffna
T.P. 2674
மாணவர்களுக்கான
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Computer Handling (கணனியைக் கையாள்தல்)
பிரிவு I 24 01 2001 புதன்கிழமை (3.30 pm)
பிரிவு II 27 01 2001 சனிக்கிழமை (3.30 pm)
Director


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.01.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.